


Follow us:

# தமிழன்

THAMILAN தமிලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 218 சோபகிருது வருடம், சித்திரை மாதம் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(25.04.2023) ஹிஜ்ரி 1444, ஷவ்வால் - 04, 0115 886187 - பக்கங்கள் 10 விலை ரூ.50




## வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு

### சகல துறைகளும் இன்று முடங்கும்

(நமது நிருபர்)

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு எதிராகவும் திட்டமிட்ட நில அபகரிப்பு, தொல்லியல் மரபுரிமைகளை சிதைத்தல் ஆகியவற்றைக் கண்டித்தும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இன்று பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில் சகல துறைகளும் முடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள், தொழிற்சங்கங்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வர்த்தக சங்கத்தினர் என அனைத்துத் தரப்பினரும் ஹர்த்தாலுக்குதமது ஆதரவை தெரிவித்துள்ளனர்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர்...

02 பக்கம்

## நெடுங்கேணியில் வழிபடலாம்!

### நீதிமன்றம் நேற்று அனுமதி

### கல்லை வணங்க முடியாதெனின் அநுராதபுரத்திலும் பொலனறுவையிலும் வழிபட முடியாதென்கிறார் சுமந்திரன்

(சிவகுமார் திவியா)



வவுனியா, நெடுங்கேணி வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் வழிபாடுசெய்வதற்கு அனுமதியளித்துள்ள நீதிமன்றம், அங்கு பக்தர்கள் செல்வதற்கு எந்தவொரு அரச அதிகாரியும் தடைவிதிக்கக் கூடாது என உத்தரவிட்டதுடன், இது தொடர்பில் பொலிஸாருக்கும் அறிவுறுத்தல் வழங்கியது.

ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் விக்கிரகங்கள் அடையாளந்தெரியாத நபர்களால் அகற்றப்பட்டமை தொடர்பிலான வழக்கு விசாரணை வவுனியா நீதவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிமன்றம்...

02 பக்கம்

## இவ்வார பாராளுமன்ற அமர்வு இன்றுமுதல் வெள்ளிவரை

### பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை சமர்ப்பிப்பதில் சிக்கல்

பாராளுமன்றம் இன்றுமுதல் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை கூடவுள்ளதுடன், ஒவ்வொரு நாளும் மு.ப. 9.30 முதல் மு.ப. 10.30 வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவினால் இன்று சமர்ப்பிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டபோதிலும் அது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லையென அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பு, மகாநாயக்க தேரர்களின் அறிவுறுத்தல், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் கரிசனை மற்றும் சர்வதேச அமைப்புகளின் அழுத்தம் காரணமாக இந்தச் சிக்கல் எழுந்துள்ளது. மேலும், புதிய சட்டமூலத்தில் சில மாற்றங்களைச் செய்வது குறித்தும் அரச உயர்மட்டத்தில் ஆராயப்படுகிறது.

02 பக்கம்

## தென் கடற்பரப்பில் சிறு நில அதிர்வு

(நா. தினுஷா)

ஹம்பாந்தோட்டையிலிருந்து 25.8 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கடற்பரப்பில் நேற்று அதிகாலை 12.45 மணியளவில் 4.4 ரிச்டர் அளவு நில அதிர்வு பதிவாகியுள்ளது.

இந்த நில அதிர்வு ஹம்பாந்தோட்டையை அண்மித்த பகுதிகளிலும் பதுளை, கண்டி, மாவனெல்லை ஆகிய பிரதேசங்களிலும் உணரப்பட்டுள்ளதாகவும் சுனாமி எச்சரிக்கை குறித்து அச்சமடையத் தேவையில்லை என்றும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் சிரேஷ்ட பணிப்பாளர் ஸ்டாலின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நான்கு நில அதிர்வு ஆய்வு மத்திய நிலையங்களிலும் இன்று (நேற்று) அதிகாலை...

02 பக்கம்

## நெடுந்தீவில் ஐவர் படுகொலை;

### கொலையாளி பயன்படுத்திய கத்தியும் சாரமும் நேற்று மீட்பு



(யாழ். செய்தியாளர்)

யாழ்ப்பாணம் நெடுந்தீவில்வயோதிபர்கள் ஐவரை கொடூரமாகக் கொலை செய்வதற்கு பயன்படுத்திய கத்தி மற்றும் சந்தேக நபர் அணிந்திருந்த சாரம் என்பன கிணற்றிலிருந்து நேற்று (24) மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, சந்தேக நபரை இரண்டு நாட்கள் பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்ய ஊர்காவற்றுறை...

02 பக்கம்

## மக்களின் தீர்மானத்தை சபையில் பிரதிபலிப்பேன்

### 28இல் முக்கிய முடிவென்கிறார் வடிவேல் சுரேஷ்



(நமது நிருபர்)

அரசியல் தலைவர் என்ற வகையில் கடந்த காலங்களில் முற்றிலும் ஏமாற்றப்பட்டேன். அன்றுமுதல் ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்து பதவிகளையும் இராஜினாமா செய்து சுயேச்சையாக இயங்கிவருகிறேன்.

02 பக்கம்

## லிவேராவை கைதுசெய்ய இடைக்கால தடை உத்தரவு




முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவை கைது செய்வது அல்லது அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்வதை தடுக்கும் வகையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக முன்னாள் சட்டமா அதிபர் தெரிவித்த கருத்து தொடர்பில் வாக்குமூலமளிக்க வருமாறு பொலிஸ் பயங்கரவாத விசாரணைப் பிரிவு மூன்று சந்தர்ப்பங்களில் அவருக்கு அழைப்பு விடுத்திருந்தது.

இதற்கு எதிராக முன்னாள் சட்டமா அதிபர்...

02 பக்கம்




மாகாண ஆளுநர்மார் நால்வரை பதவியில் இருந்து நீக்கிவிட்டு அந்த இடங்களுக்கு புதியவர்களை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

இவர்களில் மூவருக்கு வெளிநாட்டுத் தூதுவர் பதவி வழங்கப்படவுள்ளது. ஒருவர் இன்னொரு மாகாண ஆளுநராக நியமிக்கப்படும் வாய்ப்பு உள்ளது. முன்னாள் அரசியல்வாதிகள் நால்வர் இந்த இடங்களுக்கு நியமனம் பெறவுள்ளனர்.

02 பக்கம்

## விரிவுரையாளர்கள் பிரச்சினை குறித்து இன்று முக்கிய பேச்சு

(நா. தினுஷா)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணி மற்றும் விரிவுரையாளர்களுக்கான வருமான வரி அதிகரிப்பு உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து இன்று (25) கூடி முக்கிய பேச்சுவார்த்தையொன்றை முன்னெடுக்க பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்க ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, இந்தக் கலந்துரையாடலில் முக்கியமான பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்க ஒன்றியத்தின் பேச்சாளர் சாருதத்த இலங்கசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (24) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

02 பக்கம்

## சூடான் மீது இலங்கை அவதானம்

சூடான் நாட்டில் இடம்பெறுகின்ற விடயங்களின் அண்மைக்கால அபிவிருத்திகள் குறித்து இலங்கை உன்னிப்பாக அவதானம் செலுத்தி வருவதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

சூடான் குடியரசுக்கு அங்கீகாரமளிக்கப்பட்டுள்ள கெய்ரோவில்...

02 பக்கம்

## வெப்ப ஆபத்து மேலும் நீடிக்கும்

### குழந்தைகள், கர்ப்பிணிகளுக்கும் எச்சரிக்கை

(கே. சுபானி)

நாட்டில் அதிக வெப்பமான காலநிலை தொடர்ந்தும் நீடிக்குமென்பதால் முற்பகல் 11 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரையான காலப்பகுதிக்குள் பொது வெளியில் தொழில்புரிவோர் தற்காலிகமாக விலகியிருக்கவோ அல்லது வேலை நேரத்தை குறைத்துக்கொள்ளவோ நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை வைத்திய சங்கம் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

அத்தோடு, அதிக வெப்பத்துடனான காலநிலை நிலவும் இந்நாட்களில் பாடசாலை மாணவர்கள் பங்குபெறும் திறந்தவெளி விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கொண்டாட்டங்கள்...

02 பக்கம்

## அதிகார சக்தியாக இணையும் கட்சிகள்

### எதிரணியினர் கூடி தீவிரமாக ஆராய்வு

(நா. தினுஷா)

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் ஜனநாயக செயற்பாடுகளுக்கு எதிரான மாபெரும் அதிகாரசக்தியாக ஒன்றிணைந்து செயற்படுவதற்காக எதிர்த்தரப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு தரப்பினர் நேற்று (24) ஒன்றுகூடியிருந்தனர்.

தற்போது நாட்டில் நிலவும் அரசியல், பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளின் மத்தியில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் தன்னிச்சையான வேலைத்திட்டங்களுக்கு எதிராக எதிர்க்கட்சியிலுள்ள சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து பொது வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்காக...

02 பக்கம்

### கமெண்ட் சுந்தர்...

பிரச்சினைகளை மறக்கடிக்கிறதில ரணில் பெரிய கில்லாடிதான் பாருங்கோ.. எலெக்சனை பத்தி யாரும் பேசுறாங்களோ இப்போ..?



## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தில் சூழ்ச்சியா?

# ஐக்கிய மக்கள் சக்தியினர் சி.ஐ.டியில் நேற்று முறைப்பாடு

(நா. தினுஷா)

இலங்கை கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் கடற் சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்புக்காக நட்டஈடு பெற்றுக்கொள்ளும் விவகாரத்தில் இலஞ்சம் பெற்றுக்கொண்ட நபர் தொடர்பிலும் இந்த வழக்கை இலங்கை நீதிமன்றத்தில் விசாரணை செய்வதற்கான வாய்ப்புகள் இருந்தும் சிங்கப்பூர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டமையில் ஏதாவது சூழ்ச்சிகள் இருந்தால் அதுதொடர்பில் விசாரணை செய்யுமாறு கோரியும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று (24) குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷன ராஜகருணா, துசார இந்துனில், காவிந்த ஜயவர்தன உள்ளிட்டோர் இந்த முறைப்பாட்டை பதிவு செய்திருந்தார்கள்.

இந்த முறைப்பாடு தொடர்பில் அவர்கள் குறிப்பிடுகையில்,

இலங்கை கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் கடற்சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்புக்காக நட்டஈடு பெற்றுக் கொள்ளுவது தொடர்பிலும் அந்த நட்ட ஈட்டுத் தொகையை குறைப்பது தொடர்பிலும் இலங்கை பிரஜையொருவர் 250 மில்லியன் டொலர் இலஞ்சம் பெற்றுக் கொண்டுள்ளதாக நீதியமைச்சர் குறிப்பிட்டிருந் தார்.

அவ்வாறு இலஞ்சம் பெற்றுக்கொண்ட நபர் யார் என்று தெரிந்தால் அது யார் என்பதை அறிவிக்க வேண்டும் என்பதுடன், அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

தற்போது இதுதொடர்பில் சிங்கப்பூரில் வழக்கு தொடர நடவடிக்கை எடுத்துள்ளார்கள். அதற்காக 4.5 மில்லியன் டொலர் செலவு செய்யப்படுகின்றது. அதற்காக பாரியளவு நிதி செலவு செய்து சிங்கப்பூர் போன்ற நாட்டில் வழக்கு தொடருவதற்கான காரணம் என்ன, இலங்கை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து இதற்கான நீதியை பெற்றுக்கொள்வதற்காக வாய்ப்பு இருக்கும் சந்தர்ப்பத்தில் நீதியமைச்சர், சட்டமா அதிபர் திணைக்களம் உள்ளிட்ட குழுவினர் திட்டமிட்டு இந்த செயற்பாடுகளிலிருந்து விலகிவிட்டார்களா, அதன் பின்னணியில் சூழ்ச்சிகள் எதுவும் இருக்கிறதா, அதிலும் ஏதாவது இலஞ்சம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா என்பது குறித்து எங்களுக்கு சந்தேகம் எழுகிறது. இவ்விரு விடயங்கள் தொடர்பிலேயே குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்திருக்கிறோம் என்று சுட்டிக் காட்டினார்கள்.

### அதிகார சக்தியாக...



ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, பிவிதுரு ஹெல உருமய, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி, சுதந்திர மக்கள் கூட்டணி உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் இதில் இணைந்து கொண்டிருந்தன.

ஆயினும், தேசிய சுதந்திர முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகள் இணைந்துகொண்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தக் கலந்துரையாடல் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் இடம்பெற்றது.

சர்வதேசத்துடன் கொடுக்கல் வாங்கல்களை முன்னெடுக்காமல் நாட்டின் எதிர்கால செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது என்றும், அதற்காக சர்வதேசத்துடனானதொரு பரந்துபட்ட பேச்சுவார்த்தையினூடாக சிறந்த வற்றை பெற்றுக்கொள்வதாகும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்தினால் கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உள்ளிட்ட பல்வேறு சட்டங்கள், மனித உரிமைகள் உள்ளிட்ட ஜனநாயக உரிமைகளை மீறுவதாக அமைந்துள்ளதாகவும் அதன் காரணமாக அவற்றுக்கு எதிராக முன்னெடுக்கவேண்டிய சகல செயற்பாடுகள் குறித்துக்கும் எதிர்த்தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் போன்றவற்றுக்கு பதிலாக மாற்று வேலைத்திட்டமொன்றை தயாரிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார். அதற்கு பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், பிவித்துரு ஹெல உருமயவின் தலைவர் உதய கம்மன்பில, பாராளுமன்ற உறுப்பினர்களான லக்ஷ்மன் கிரியெல்ல, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், சந்திம வீரக்கொடி, நாலக கொடஹேவா, வீரசுமன வீரசிங்க, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தயாசிறி ஜயசேகர, கெவிந்து குமாரதுங்க உள்ளிட்டோர் அதற்காக சரியான செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவரிடம் கோரியிருக்கிறார்கள்.

சட்ட, தேசிய, சமூக, சர்வதேச ஆகிய நான்கு முறைகளில் இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று சுதந்திர மக்கள் கூட்டணியின் தலைவர் டலஸ் அலகப்பெரும வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த யோசனைகள், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை தோற்கடிப்பதற்கு எதிர்த்தரப்பிலுள்ள சகல கட்சிகளும் ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் நடைமுறைப்படுத்தப்பட்டால் சர்வதேச மட்டத்தில் பாரதூரமான நெருக்கடி ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் கூட இந்த தீர்மானமிக்க சந்தர்ப்பத்தில் எமது நாட்டுக்கு எதிராக யோசனைகளை முன்வைக்கக்கூடும் என்றும் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் இதன்போது சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும், இந்த சட்டமூலம் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு பதிலாக தனியார் சட்டத்தரணிகளினால் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. சுட்டிக்காட்டியுள்ளதுடன் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தினூடாக ஜனாதிபதி சட்டரீதியான சர்வாதிகாரியாக முயற்சிப்பதற்கான வாய்ப்புகள் அதிகமிருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தச் சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்போது அதற்கு சரியான காலப்பகுதியை திட்டமிடுவது மிக அவசியம் என்று அதன்போது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. தெரிவித்துள்ளதுடன் துறைசார் செயற்குழு கூடும்போது இந்தச் சட்டமூலம் தொடர்பில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலான கலந்துரையாடலொன்றை முன்னெடுக்க வேண்டும் என்று ரவூப் ஹக்கீம் எம்.பி. தெரிவித்திருக்கிறார்.

இந்த பொது இணக்கப்பாட்டை அடுத்தக் கட்டத்துக்கு எடுத்துச் செல்லும் செயற்பாடுகளுக்காக பாராளுமன்ற எதிர்த் தரப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளராக எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட எதிர்த்தரப்பின் ஏனைய கட்சிகளினுடைய தலைவர்களின் இணக்கத்துடன் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் நியமிக்கப்பட்டுள்ளார்.

### வெப்ப ஆபத்து...

நிறுத்தப்படவேண்டும் என வைத்திய சங்கம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில் வெப்பம் அதிகரித்திருப்பதற்கான காரணம் குறித்து வளிமண்டலவியல் திணைக்களத்தின் முன்கணிப்புப் பிரிவின் பணிப்பாளர் டொக்டர் சிரோமனி ஜயவர்தன தெரிவிக்கையில்,

ஏப்ரல் மற்றும் மே மாதம் வடகிழக்கு பருவப்பெயர்ச்சி நிலவும் காலப்பகுதியாகும். எனினும், தற்போது குறைந்த அழுத்தத்துடனான காற்றே இலங்கையை ஊடறுத்து செல்கிறது. இதனாலேயே தற்போது அதிக வெப்பத்துடனான காலநிலை நிலவுகின்றது. குறைவான காற்றின் வேகத்தால் சுற்றுச்சூழலின் ஈரப்பதன் குறைந்துள்ளது. இதனால் சுற்றுச்சூழலில் காணப்படும் வெப்பத்தை விட எமது உடலின் வெப்பம் அதிகரிக்கின்றது.

இவ்வெப்பத்துடனான காலநிலை தணிவதற்கு வடகிழக்கு பருவமழை பெய்யவேண்டும். எதிர்வரும் மே மாதம் 3 மற்றும் 5ஆம் திகதிகளில் அதிக உஷ்ணமான காலநிலை சீராகும் வாய்ப்புள்ளது என அவர் தெரிவித்தார்.

கடந்த 24 மணிநேரத்துக்குள் பொலன்னறுவையிலேயே அதிக வெப்பம் பதிவாகியுள்ளது. அங்கு 35.7 பாகை செல்சியஸ் பதிவாகியிருந்தது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள மக்கள் அதி வெப்பத்தால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அதிக வெப்பம் நிலவும் இக்காலப்பகுதியில் குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், முதியோர் மற்றும் நோயாளிகள் மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும் என்பதுடன், போதுமான அளவு நீரைப் பருகுமாறும், நிழலான இடங்களில் இளைப்பாறுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், கடினமான வேலைகளை மட்டுப்படுத்துமாறும், சிறு குழந்தைகளை வாகனங்களில் தனியாக விட்டுச்செல்ல வேண்டாம் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

### விரிவுரையாளர்கள்...

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு இந்த அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள வருமான வரி தொடர்பில் பல்வேறு தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கிறோம். அதே போன்று, உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தப் பணிகள் குறித்து இறுதித் தீர்வுக்கு வருவதற்கு கல்வியமைச்சுடன் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

ஆனால், இதனை காரணமாக காட்டி விரிவுரையாளர்களுக்கு பிரச்சினை ஏற்படுத்தி, அச்சுறுத்தலுக்குள்ளாக்கி, உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு செயற்பாடுகளை கால தாமதப்படுத்துவதற்கு பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தார்கள்.

அரசாங்கமே இந்தப் பிரச்சினையை உருவாக்கியது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினையை அரசாங்கமே தொடர்ச்சியாக முன்னெடுத்தும் வருகின்றது.

எனவே, பிரச்சினைக்கு தீர்வைக் கண்டு விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளை விரைவாக நிறைவு செய்வதற்கு அரசாங்கமே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மக்களுக்காகவும், பாடசாலை மாணவர்களுக்காகவும் எங்களால் முடிந்த அதிகப்பட்ச ஒத்துழைப்புகளை வழங்கி செயற்பட்டு வருவதோடு அதற்கான கலந்துரையாடல்களையும் முன்னெடுத்து வருகிறோம் என்றார்.

### வடக்கு, கிழக்கு...

செல்வம் அடைக்கலநாதன், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் த. சித்தார்த்தன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறீகாந்தா, ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் சி.வேந்தன் ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் ஹர்த்தாலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது,

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் எமது இனத்துக்கு பாதகமான அதன் கடுமையான விளைவுகளை கருத்தில்கொண்டு அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவும், எமது இனத்தின் இருப்பை கேள்விக்குறியாக்கும் பேரினவாத அரசின் திட்டமிட்ட, எமது சுயநிர்ணய உரிமையை நீர்த்துப் போக வைக்கும் வகையில் எமது தாயக மண்ணில் முன்னெடுக்கப்பட்டு வரும் நில அபகரிப்பு, குடியேற்றங்களின் மூலம் குடிப்பரம்பலை சிதைத்தல் ஆகியவற்றுக்கு எதிராக ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்துள்ளோம். மேலும், எமது தொன்மையை வெளிப்படுத்தும் சான்றுகளை அழித்தொழித்தல், இதற்கு ஏதுவாக தமிழ் மக்களின் தொன்மையை வெளிப்படுத்தும் சான்றுகளான சைவ ஆலயங்களை இடித்தும், அழித்தும், பௌத்த சின்னங்களை நிறுவியும், இந்நாட்டின் பூர்வீகக் குடிகளான தமிழ் மக்களின் வரலாற்றை சிதைக்கும் அரசின் அனைத்து கட்டமைப்புகளின் செயற்பாட்டை எதிர்த்தும் இந்த கவனயீர்ப்பு முன்னெடுக்கப்படவுள்ளது.

அரசியல் கட்சிகள், மத அமைப்புகள், தொழிற்சங்கங்கள், பொது கட்டமைப்புகள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் தமிழ்த் தேசியப் பற்றாளர்கள் என அனைத்து மக்களும் ஒன்றிணைந்து இன்று எமது தாயகப் பிரதேசத்தில் அனைத்து வர்த்தக நிர்வாக சேவைகளையும் முடக்கி வடக்கு - கிழக்கு தழுவிய பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்க தீர்மானித்துள்ளோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் தமிழர் தாயகத்தில் முன்னெக்கப்படும் பௌத்த சிங்களமயமாக்கலை எதிர்த்து தமிழ்த் தேசியக் கட்சிகளால் இன்று (25) முன்னெடுக்கப்படும் ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்குவதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீட மாணவர் ஒன்றியம், இலங்கை திறந்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகியன தெரிவித்துள்ளன.


## பெயர் மாற்றம்

நுவரெலியா மாவட்டம் வலப்பனை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 504/A பிங்கத்தலாவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கும் மருதவீரன் காந்தரூபி அடையாள அட்டை இலக்கம் 927092794 V கொண்ட எனது பெயர் மதுரவீரன் காந்தரூபி எனவும் குறிப்பிடப்படுகிறது. மேற்படி இரண்டு பெயர்களிலும் குறிப்பிடப்படும் நபர் நானே என்பதை இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கும் இலங்கை வாழ் மக்களுக்கும் அறியத்தருகிறேன்.

மருதவீரன் காந்தரூபி


## புதிய சட்டமூலத்துக்கு எதிராக கையொப்பம் பெறும் நடவடிக்கை

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்கி பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை கிழித்தெறியுமாறு வலியுறுத்தும் வகையிலான ஒன்றிணைந்த தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள், சிவில் மற்றும் பல்துறைசார் அமைப்புகள் உள்ளிட்ட தரப்பினர் இணைந்து ஒரு கூட்டறிக்கையில் கையொப்பம் பெறும் நடவடிக்கை நேற்று (24) கொழும்பில் இடம்பெற்றது.

கொழும்பு, தேசிய புத்தகசாலையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வு அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை நீக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அதனையும் மீறி இந்தச் சட்டமூலத்தை கொண்டுவர நடவடிக்கை எடுத்தால் பாரிய எதிர்ப்புகளை சந்திக்கவேண்டும் என்றும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே தெரிவித்தார்.

### நெடுங்கேணியில்...

இந்த உத்தரவை பிறப்பித்தது.

இந்த வழக்கு தொடர்பில் நீதிமன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் இது குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில்,

வெடுக்குநாறி மலையில் ஆதிலிங்கேஸ்வரர் ஆலய சிலைகள் உடைக்கப்பட்டமை தொடர்பிலான வழக்கு நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமை தொடர்பாக பொலிஸார் தகவல் வழங்கியுள்ளார்கள். ஆனால், எவரும் கைது செய்யப்படவில்லை. யாரென்று தெரியாது தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுப்பதாக சொல்கின்றனர். மேலதிகமாக அறிக்கைகள் சமர்ப்பிக்குமாறு கடந்த தினத்தில் நீதிவான் உத்தரவிட்டதற்கமைவாக இன்று (நேற்று) குறித்த இடத்தில் நீண்டகாலமாக பூஜை வழிபாடுகள் இடம்பெற்றமைக்கான புகைப்பட ஆதாரங்களை அவர்களே சமர்ப்பித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி, இது தொல்லியலுக்குரிய பிரதேசமென்றும் இன்று (நேற்று) நாங்கள் செய்த விண்ணப்பத்துக்கு பதிலளிப்பதற்கு அரச சட்டத்தரணியின் உதவியை நாடியுள்ளதாகவும் அதற்காக பிறிதொரு தினத்தையும் கேட்டிருந்தார்கள். எமது அரசியலமைப்பின் 10 ஆம் 14:1 உ உறுப்புரைகளின் கீழ் மத வழிபாடு என்பது எவராலும் மட்டுப்படுத்த முடியாத உரிமையாகும். மரத்தையோ கல்லையோ வழிபடலாம். அதற்கு பூரண உரித்துள்ளது. அந்த மரம் வனப்பிரதேசத்தில் இருப்பதால் வணங்க முடியாது என எவரும் கூறமுடியாது. ஒரு கல் தொல்லியலுக்குரியது என்பதற்காக அதனை வணங்க முடியாது என எவரும் கூற முடியாது.

அவ்வாறு சொல்வதாக இருந்தால் அநுராதபுரத்திலும் பொலனறுவையிலும் சென்று எவரும் வழிபட முடியாது.

இந்த விடயங்கள் இன்று (நேற்று) நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்ட பின்னர் நீதவான் இடைக்கால உத்தரவை வழங்கியுள்ளார்.

அதாவது, வெடுக்குநாறி பிரதேசத்திலே வழிபாடுகளை நடத்துவதற்கு பக்தர்கள் சொல்வதை எந்த அரச அதிகாரியும் தடுக்கக்கூடாது என்ற உத்தரவு கொடுக்கப்பட்டு பொலிஸாருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார்.

### இவ்வார பாராளுமன்ற...

இது தொடர்பில் இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் 'தமிழன்' நாளிதழுக்கு தெரிவித்தன.

### உஷ்...

அந்தப் பகுதிகளின் அரசியல்வாதிகள் வழங்கிய அழுத்தத்தின் காரணமாகவே இந்தப் பதவி நீக்கமும் நியமனங்களும் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

### மக்களின்...

எனது நிலைப்பாடு குறித்து மக்களுக்கு தெரியும். அவர்களின் தீர்மானத்தை எதிர்வரும் 28ஆம் திகதி சபையில் பிரதிபலிப்பேன் என பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

பசறை நூலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் (23) இடம்பெற்ற அகில இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க உறுப்பினர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வடிவேல் சுரேஷ் எம்.பி. அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மற்றும் சர்வதேச நாணய நிதிய விவகாரம் தொடர்பிலான பாராளுமன்ற வாக்கெடுப்பு குறித்து முடிவெடுப்பதை எனது வாக்காளர்களிடம் விட்டுவிடுகிறேன். அவர்களின் தீர்மானம் எதுவோ அதன் பிரகாரம் விவாதத்தின் இறுதியில் வாக்களிப்பேன்.

நான் தனி மனிதனாக தீர்மானங்களை மேற்கொள்வதில்லை. நான் என்ன செய்ய வேண்டுமென எனக்கு வாக்களித்த மக்கள் கூறுவார்கள். எனக்கு கடந்த காலங்களில் இடம்பெற்ற கசப்பான சம்பவங்களை மக்கள் நன்கறிவார்கள்.

நான் ஏமாற்றப்பட்ட அன்றே அந்தக் கட்சியின் அனைத்துப் பதவிகளையும் இராஜினாமா செய்து சுயேச்சையாக செயற்படுவதாக அறிவித்தேன். நான் இன்னும் அந்த நிலைப்பாட்டிலேயே இருக்கிறேன்.

எல்லை நிர்ணயம் குறித்து எனது அதிருப்தியை வெளியிட்டுள்ளேன். மஹிந்த தேசப்பிரியவை நான் மதிக்கிறேன். அவர் தேர்தல் ஆணையாளராக இருந்து சிறப்பாக செயற்பட்டார். அவர் எல்லை நிர்ணய அறிக்கையை சட்டமாக்குவதற்கு முன்னர் மீண்டும் சரிபார்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

### நெடுந்தீவில்...

நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் அனுமதியளித்தது.

அதனடிப்படையில், சந்தேக நபர் நேற்று அதிகாலை நெடுந்தீவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

சந்தேக நபர் வழங்கிய தகவலின் அடிப்படையில் கொலை இடம்பெற்ற வீட்டின் பின்புறமாக உள்ள கிணற்றிலிருந்து கொலைக்கு பயன்படுத்திய கத்தி மற்றும் சந்தேக நபர் அணிந்திருந்த சாரமும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நெடுந்தீவு மாவிலி இறங்குதுறையை அண்டிய 12ஆம் வட்டாரத்தில் கடற்படை முகாமுக்கு அண்மையிலுள்ள வீடொன்றில் இருந்து வெட்டுக்காயங்களுடன் ஐவரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

நூறு வயது மூதாட்டி படுகாயத்துடன் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத்தின் கட்டளையில் யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் விஷாந்தின் வழிகாட்டலில் பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் துரித விசாரணைகளை முன்னெடுத்தனர்.

பொலிஸ் குழுவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நெடுந்தீவில் நடமாடிவிட்டு கொலை இடம்பெற்ற தினத்தன்று காலை அங்கிருந்து வெளியேறிச் சென்ற நபரை புங்குடுதீவில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு கைது செய்தனர்.

ஜேர்மனியில் கொலை முயற்சி வழக்கொன்றில் குற்றவாளியாகக் கண்டறிந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட 51 வயது நபரே கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 26 பவுண் தங்கநகைகள் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### லிவேராவை...

தப்புல டி லிவேரா மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த எழுத்தாணை மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி நிஷ்ஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதிபதி யு.மரிக்கார் ஆகியோர் அங்கம் வகிக்கும் நீதிபதிகள் குழாம் இந்த இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்துள்ளது.

முன்னாள் சட்ட மா அதிபர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வாவுடன் சட்டத்தரணிகளான ஷானக்க குரே மற்றும் திமித்ர அபேசேகர ஆகியோர் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

### தென் கடற்பரப்பில்...

12.45 மணியளவில் பூமி அதிர்ச்சி பதிவாகியுள்ளது. கணக்கீட்டு அடிப்படையில் இந்த பூமி அதிர்ச்சி 4.4 ரிச்டர் அளவில் பதிவாகியுள்ளது.

ஹம்பாந்தோட்டையிலிருந்து 25.8 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கடற்பரப்பில் இந்த பூமி அதிர்ச்சி பதிவாகியுள்ளது. இந்த பூமி அதிர்ச்சியினால் பாதிப்புகள் எதுவும் ஏற்படவில்லை. ஹம்பாந்தோட்டை பிரதேசத்தை அண்மித்த பகுதியிலேயே இந்த அதிர்வு அதிகம் உணரப்பட்டுள்ளது.

பூமி அதிர்ச்சி தொடர்பான தொடர் ஆய்வுகளை முன்னெடுத்தே வருகிறோம். எமது நாட்டில் பாரியளவான பூமி அதிர்ச்சிகள் பதிவாகாவிட்டாலும் சிறிய எண்ணிக்கையிலான அதிர்வுகள் பதிவாகின்றன. அதற்கமைய பூமி அதிர்ச்சி இடம்பெறும் பிரதேசங்களை அடையாளங் காணும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய, கட்டட நிர்மாணப் பணிகளுக்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த அதிர்வினால் சுனாமி ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் இல்லை.

மிகக் குறுகிய காலத்தில் பூமி அதிர்வுகள் பதிவானாலும் பாரியளவு பூமி அதிர்ச்சி பதிவாகும் என்று பயங்கொள்ளவேண்டியதில்லை. ஹம்பாந்தோட்டையை அண்மித்த பிரதேசங்கள், பதுளை, கண்டி, மாவனெல்லை ஆகிய பிரதேசங்களிலும் இந்த பூமி அதிர்ச்சி உணரப்பட்டுள்ளது.

### சூடான் மீது...

உள்ள இலங்கைத் தூதரகம் சூடானில் உருவாகி வரும் நிலைமை குறித்து உன்னிப்பாக அவதானம் செலுத்தி வருகின்றது. கார்ட்டூம் மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் உள்ள இலங்கைப் பிரஜைகளுடன் தூதரகம் தொடர்ந்தும் தொடர்புகளைப் பேணி வருவதுடன், அவர்களின் பாதுகாப்பு தொடர்பாக அவர்களுக்கு ஆலோசனைகளையும் வழங்கியுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் slcairoconsular@gmail.com என்ற மின்னஞ்சல் ஊடாகவும் 00201272813000 என்ற தொலைபேசி இலக்கம் வாயிலாகவும், மற்றும் கார்ட்டோமில் உள்ள இலங்கையின் தூதுவர் சயீத் அப்தெல்லை 00249912394035 என்ற தொலைபேசி இலக்கம் வாயிலாகவும் அழைத்து உடனடியாக உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

# பழுதுபார்த்து பாவனைக்குட்படுத்தக்கூடிய 14 வாகனங்கள் நிர்வாக கவனயீனத்தால் பயன்படுத்த முடியாத நிலையில்!

## சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் குறித்து தேசிய கணக்காய்வு அலுவலகம் அறிக்கை

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு வழங்கப்பட்ட 146 வாகனங்களில் 33 வாகனங்கள் இயந்திரக் கோளாறு காரணமாக திணைக்கள வளாகத்திலும், டென்சில் கொப்பேகடுவ மாவத்தை வாகன தரிப்பிடத்திலும் நீண்டகாலமாக பாதுகாப்பற்ற முறையில் நிறுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,


இயந்திரக் கோளாறு காரணமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ள 33 வாகனங்களில் 14 வாகனங்கள் பழுதுபார்க்கப்பட்டு மீண்டும் பயன்படுத்த முடியுமென தொழில்நுட்ப அதிகாரிகளின் அறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளது.

தொழில்நுட்ப அதிகாரிகள் இந்த அறிக்கைகளை 2020 ஒக்டோபர் மாதம் மற்றும் 2021 ஜூலை மாதங்களில் சமர்ப்பித்துள்ளதாகவும் தணிக்கை அறிக்கை காட்டுகிறது.

இருப்பினும் 2022 ஏப்ரல் மாதம் 24ஆம் திகதிவரையில் இந்த வாகனங்களை சீர்செய்ய சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்கள நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுடன், இந்த வாகனங்கள் பழுதுபார்க்கப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டமையால் மீண்டும் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். மேலும் அந்த வாகனங்களின் உதிரிப்பாகங்கள் காணாமல் போகாமல் பாதுகாக்கவேண்டியது நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

அண்மையில் பாராளுமன்ற விசாரணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 2021ஆம் ஆண்டுக்கான செயற்றிறன் அறிக்கையில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தாய்லாந்து அரசு பரிசாக வழங்கிய யானையை மீளப்பெறுவதற்கு ஆராய்வு



தாய்லாந்தினால் 2001ஆம் ஆண்டு இலங்கைக்கு பரிசாக வழங்கப்பட்ட மூன்று யானைகளில் ஒன்றான சக் சுரினை, மீளப் பெறுவதற்கான வழிகளை தாய்லாந்து அரசாங்கம் தொடர்ந்து ஆராய்ந்து வருவதாக அந்நாட்டு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த யானை, அதனை கையாள்பவர்களால் தவறாக நடத்தப்பட்டதாக விலங்குகள் உரிமைகள் அமைப்பினால் கடந்த ஆண்டு அறிக்கைகள் வந்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சக் சுரின் நிலைமையை அறிந்திருந்தாலும், யானையை தாய்லாந்திற்கு கொண்டுசெல்வது, அதன் அளவு மற்றும் அதனுடைய காயங்களின் தன்மை காரணமாக சிக்கல் ஏற்பட்டுள்ளது.

தாய்லாந்து சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வள அமைச்சர் வரவுட் சில்பா-ஆர்ச்சா, சக் சுரினை தமது நாட்டுக்கு கொண்டு வருவதற்கு C-130 போக்குவரத்து விமானத்தைப் பயன்படுத்துவதே ஆரம்பத் திட்டம் என்று விளக்கினார்.

இருப்பினும், ஆயுதங்கள் மற்றும் தாங்கிகள் போன்ற இராணுவத் தளவாடங்களைக் கொண்டுசெல்வதற்காக முதலில் வடிவமைக்கப்பட்ட விமானத்தின் சரக்கு பிடியில், யானையை அடைக்க பொருந்தாது என்பது தெளிவாகத் தெரிந்தவுடன் இந்த யோசனை கைவிடப்பட்டது. இதனையடுத்து, சக் சுரினை மீட்டெடுக்க ஒரு கப்பலை அனுப்பும் திட்டத்தை தாய்லாந்து அரசாங்கம் முன்மொழிந்தது. எனினும், காயப்பட்ட யானைக்கு இரண்டு வார பயணம் மிக நீண்டதாக இருக்கும் என்பதால் இதுவும் பொருத்தமற்றதாகக் கருதப்பட்டது.

சக் சுரின் நாடு திரும்புவதற்குப் பொருத்தமான தீர்வைக் காண அமைச்சு தற்போது வெளிவிவகார அமைச்சுடன் ஒத்துழைத்து வருவதாக வரவுட் கூறினார்.

2001ஆம் ஆண்டு தாய்லாந்தினால் இலங்கைக்கு குறித்த யானை பரிசளிக்கப்பட்டதிலிருந்து அதன் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும், அதன் பின்னர், சக் சுரின் பல இடங்களுக்கு கை மாறியுள்ளதாகவும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

சமீப காலம் வரை, குறித்த யானை அளுத்கம கந்தே விகாரையில் வசித்து வந்தது. இலங்கையின் விலங்குகள் பாதுகாப்பு அமைப்பான Rally for Animal Rights and Environment (ரேர்) கூற்றுப்படி, விகாரையில் யானையின் உறுப்புகள் சங்கிலியால் கட்டுப்படுத்தப்பட்டதால், அதன் உடல் முழுவதும் காயங்கள் ஏற்பட்டதாக தெரிவித்தது.

கடந்த ஆண்டு இறுதியில், சக் சுரினை அவசர மருத்துவ சிகிச்சைக்காக தாய்லாந்துக்கு அழைத்து செல்லுமாறு அந்நாட்டு அரசாங்கத்தை அந்த அமைப்பு வலியுறுத்தியது.

# சுதுவெல்லை புத்தாண்டு நிகழ்வின் பரிசளிப்பு விழாவில் ஜனாதிபதி பங்கேற்பு





ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய கொழும்பு அமைப்பாளர் கித்சிறி ராஜபக்ஷவின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "கித்சிறி மேலா" புத்தாண்டு நிகழ்வுகள் நேற்று முன்தினம் (23) டீன்ஸ் வீதிச் சந்தியில் இடம்பெற்றன.

இப்போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வுகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெற்றதோடு, புத்தாண்டு அழகியாக தெரிவுசெய்யப்பட்ட ஹஷினி சமுதிகா, இரண்டாம் இடத்தைப் பெற்ற செனுகி ரதீஷா, மூன்றாம் இடத்தைப்பெற்ற லக்ஷிகா இஷாரா ஆகியோர் ஜனாதிபதியிடமிருந்து பரிசுகளை பெற்றுக்கொண்டனர்.

அதனையடுத்து சைக்கிளோட்டப் போட்டியில் வெற்றிபெற்ற வீரர்களுக்கான பரிசுகள் மற்றும் சான்றிதழ்களும் ஜனாதிபதியினால் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து ஸ்ரீ தர்மாலோக தயா மகா விகாரைக்கு அருகில் கித்சிறி ராஜபக்ஷவினால் நிர்மாணிக்கப்பட்ட கடைத்தொகுதிக்கான காணியை அன்பளிப்புச் செய்த மொஹமட் இஸ்மயிலுக்கு 50 இலட்சம் ரூபா பெறுமதியான வீடொன்றும் 30 இலட்சம் ரூபா பெறுமதியான கடையொன்றின் உரிமமும் 05 இலட்சம் ரூபா பணமும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வழங்கப்பட்டன. இதன்போது நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிமேஷ் ஹேரத்தும் கலந்துகொண்டிருந்தார்.

நாட்டுக்குள் சட்டம் ஒழுங்கை உறுதிப்படுத்திய மாசற்ற தலைவர் என்ற வகையில் "ஜனதா பிரசாதாபிமானி" விருது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கித்சிறி ராஜபக்ஷவினால் வழங்கப்பட்டது.

# வடக்கில் பனை வளம் அழிக்கப்படுவதை தடுப்பதற்காக விசேட வேலைத்திட்டம்



வடமாகாணத்தில் பனை வளம் அழிக்கப் படுவதைத் தடுக்க விசேட வேலைத்திட்டமொன்றை பனை அபிவிருத்திச் சபையும் தென்னை பயிர்செய்கை சபையும் இணைந்து முன்னெடுக்கப்படவுள்ளதாக தென்னை பயிர்செய்கை சபையின் யாழ். பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தெரிவித்தார்.

யாழில் நேற்று (24) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாணத்தில் தென்னைச் செய்கையும், பனை செய்கையும் கூடுதலான அளவு மக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆனால், பனை என்ற வளம் மிக முக்கியமானது வடமாகாணத்தின் வளங்களாக இரண்டு கண்கள் காணப்படுகின்றன. ஒன்று தென்னை, மற்றையது பனை. ஆனால், பனை வளம் படிப்படியாக ஓரளவுக்கு குறைந்துகொண்டு செல்கின்றது. தென்னைச் செய்கை வீதம் கூடுதலாக இருக்கின்றது. பனையை வெட்டி தென்னை செய்கையை கூடுதலாக செய்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

எமது பரிந்துரைக்கிணங்க தென்னை, பனை செய்கையை ஒன்றாக இணைத்து செய்வதற்குரிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதாவது புதிய வேலைத்திட்டம் ஒன்றினை நாங்கள் முன்னெடுக்கவுள்ளோம்.

அதற்கான முன்னாயத்த வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக, தென்னைச் செய்கையை மேற்கொள்ளாது பனை மரம் அழிப்பதை நிறுத்துவதும் பனை தென்னையை ஒன்றாக இணைத்து வளர்ப்பதை ஊக்குவிப்பதுமே அதன் நோக்கமாகும்

இதற்கான திட்டம் விரைவில் பனை அபிவிருத்திச் சபையும், தென்னை பயிர்ச்செய்கை சபையும் இணைந்து கொண்டுவருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

# ரிப்பர் வாகனத்தை சட்டத்துக்குப் புறம்பாக பறிமுதல் செய்த லீசிங் நிறுவனப் பணியாளர் கைது

(யாழ். நிருபர்)

லீசிங் நிலுவைப் பணம் செலுத்தவில்லை என்று தெரிவித்து தம்மை பொலிஸார் என அறிமுகப்படுத்தி ரிப்பர் வாகனத்தை பறிமுதல் செய்த நிதி நிறுவனத்தின் பணியாளரொருவரை கோப்பாய் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் மூவர் தேடப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவர் நிதி நிறுவனம் ஒன்றில் குத்தகைக்கு (லீசிங்கில்) ரிப்பர் வாகனம் எடுத்துள்ளார்.

அவரது வாகனம் கடந்த சில நாட்களுக்கு முன்னர் கோப்பாய் வீதி சமிக்ஞை விளக்கில் தரித்து நின்றபோது அங்கு வந்த நால்வர் தம்மை பொலிஸார் எனக் கூறி லீசிங் தவணைப் பணம் செலுத்தவில்லை எனக்கூறி ரிப்பர் வாகனத்தை பறிமுதல் செய்து எடுத்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வாகனத்தை லீசிங்கில் கொள்வனவு செய்தவரினால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. தனது வாகனத்துக்குள் அழைபேசி ஒன்று, 50 ஆயிரம் ரூபா பணம் என்பன இருந்ததாக முறைப்பாட்டில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், கோப்பாயைச் சேர்ந்த ஒருவரை கைதுசெய்துள்ளனர். மேலும் மூவரை தேடிவருவதாக பொலிஸார் கூறினர்.

கைதுசெய்யப்பட்டவர் மீது சட்டத்துக்குப் புறம்பாக வாகனத்தை பறிமுதல் செய்தமை, வாகனத்துக்குள் இருந்த பணம், அழைபேசியை கொள்ளையிட்டமை மற்றும் பொலிஸார் என மோசடியாக தம்மை அறிமுகப்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் சித்திரை மாதம் 12ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**மேஷம்** – உங்கள் செயல் திறமையால் அனைத்தையும் வெற்றி கொள்வீர்கள். நண்பர்களால் பாராட்டப்படுவீர்கள்.

**ரிஷபம்** – குடும்பத்துக்கான சுப செலவுகள் ஏற்படும், ஆனாலும் தேவைக்கான பணம் நிச்சயம் கிடைக்கப் போவதால் கவலை வேண்டாம்.

**மிதுனம்** – உங்கள் உடல் இன்று ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும், புகழ் செல்வாக்கு அதிகரிக்கும்.

**கடகம்** – குடும்ப உறவில் அக்கறை காட்டுங்கள். தேவையற்ற கருத்து வேறுபாடுகளுக்கு இடம் கொடாதீர்கள்.

**சிம்மம்** – அரசாங்க வகையில் பல சலுகைகள் நீங்கள் அடைவீர்கள் மூத்தவர்களின் உதவிகள் கிடைக்கும்.

**கன்னி** – தொழில்-வியாபாரத்தில் உங்கள் முயற்சி பலிக்கும் நாள், உங்கள் தொழில் நிமித்தமான பயணங்கள் அமையும்.

**துலாம்** – தந்தைவழி நன்மைகள் சொத்து சுகங்களை அடைவீர்கள். தான தர்மங்களால் புண்ணியம் சேர்ப்பீர்கள்.

**விருச்சகம்** – கடவுள் உங்கள் பொறுமையை சோதிக்கும் நாள், மனதைக் கெடுத்துக் கொள்ளாது அமைதியாக இருங்கள்.

**தனுசு** – உங்கள் புகழ், செல்வாக்கு இன்று உயரப் போகின்றது. அரச வகையில் லாபங்களை அடைவீர்கள்.

**மகரம்** – மனதையும், உடலையும் கெடுத்துக் கொள்ளாதீர்கள். சிரித்துப் பேசும் மறைமுக எதிரிகளிடம் எச்சரிக்கையாக இருங்கள்.

**கும்பம்** – அரச உயர் மட்ட உதவிகள், அழைப்புகள் உண்டு. குழந்தைகளால் அதிக நன்மைகளையும் லாபங்களையும் பெறுவீர்கள்.

**மீனம்** – தாயின் முழுமையான அன்பும் ஆசியும் கிடைக்கும் நன்நாள். வீடு வாகன வகையில் சுப செலவுகள் உண்டு.

| | |
|---|---|
| **திதி** | : பஞ்சமி மு.ப.9.40 வரை பின் ஷஷ்டி |
| **நட்சத்திரம்** | : திருவாதிரை பி.இ.4.20 வரை பின் புனர்பூசம் |
| **யோகம்** | : மரண யோகம் முழுவதும் |
| **வார சூலை** | : வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்** | : மு.ப.7.56 – 8.56 மணி வரை |
| **ராகு காலம்** | : 2.56 – 4.26 மணி வரை |
| **எமகண்டம்** | : 8.56 – 10.26 மணி வரை |
| **குளிகை** | : 11.56 – 1.26 மணி வரை |
| **சந்திராஷ்டமம்** | : விருச்சிக ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| **தன அதிஷ்டம்** | : மிருகசீரிடம்,சித்திரை, அவிட்டம் (பிறந்தவர்களுக்கு) |
| **விஷேட தினம்** | : ஷஷ்டி விரதம் |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

### மே 09 காலிமுகத்திடல் தாக்குதல் சம்பவம்

# தேசபந்து தென்னகோனை சந்தேகநபராக பெயரிட மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு



மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை காலிமுகத்திடல் தாக்குதல் சம்பவத்தில் சந்தேகநபராக பெயரிடுவதை மற்றும் கைதுசெய்வதை தடுக்கும் வகையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த வருடம் மே 9ஆம் திகதி, காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதல் சம்பவத்தில் தன்னை சந்தேக நபராக பெயரிடுமாறு சட்ட மா அதிபர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பிய கடிதத்தை நடைமுறைப்படுத்துவதை தடுக்கும் வகையில் உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு, சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் மனுவொன்றில் கோரியிருந்தார்.

இதனைப் பரிசீலித்த நீதியரசர்களான நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் எம்.ஏ.ஆர்.மரிக்கார் ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு, இந்த இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்துள்ளது.

# நூரளையில் பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கிய சந்தேக நபர்கள் ஐவர் கைது

(செ.திவாகரன்)

இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலை சமரசம் செய்ய தலையிட்ட பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கிய சந்தேகநபர்கள் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நுவரெலியா வசந்த கால திடலில் கடந்த சனிக்கிழமை (22) இரவு இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாகொல பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய ஒருவர் ஆரம்பத்தில் கைது செய்யப்பட்டு விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர். ஏனைய நான்கு சந்தேகநபர்கள் 23ஆம் திகதி மாலை கைதுசெய்யப்பட்டு, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தாக்குதலுக்குள்ளான பொலிஸ் உத்தியோகத்தர் சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் நுவரெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

# டயலொக் ஆசிஆட்டா 1990 சுவ செரிய அவசர சேவைகளுக்கான உத்தியோகபூர்வ இணைப்பாளராக தனது பங்களிப்பை அளிக்க முன்வந்துள்ளது

இலங்கையின் முதன்மை இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி நாடளாவிய ரீதியில் இலவச முன்-மருத்துவமனை அவசர சிகிச்சை சேவையை வலுவூட்டுவதற்கு உத்தியோகபூர்வ 'இணைப்பு கூட்டாளராக' 1990 சுவ செரிய அவசர சுகப்படுத்தல் (அம்பிலியூலன்ஸ்) சேவைக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளது.

1990 சுவ செரிய அறக்கட்டளை, அனைத்து இலங்கையர்களுக்கும் அத்தியாவசிய அவசர சிகிச்சையை வழங்கி வருகின்றது. அதற்கமைய நாளொன்றுக்கு 1050 சிகிச்சைகளைக் கையாளும் அதேவேளை, சராசரியாக 11.40 நிமிடங்கள் பதிலளிக்கும் நேரத்தை செலவிடுவதுடன், மொத்தமாக வருடத்திற்கு 6 மில்லியன் அழைப்புகளுக்குப் பதிலளிக்கிறது. இந்த அர்ப்பணிப்பின் மூலம் 1990 சுவ செரிய அவசரகால சுகப்படுத்தல் சேவைகள் இயங்குதளத்தை புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கும் நாடு முழுவதும் தொடர்ச்சியான இணைப்புக் கட்டமைப்பை வழங்குவதற்கும் மற்றும் அவசரநிலைகளுக்கு விரைவான மற்றும் பயனுள்ள பதிலளிப்பை உறுதிசெய்வதன் மூலமும் சுவ செரிய அவசர சேவைகளை டிஜிட்டல் மயப்படுத்தலூடாக டயலொக் மேம்படுத்தியுள்ளது.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்க கருத்துத் தெரிவிக்கையில், "அனைத்து இலங்கையர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த முடியும் என நாங்கள் நம்புகிறோம். மேலும் 1990 சுவ செரிய உடனான எங்கள் கூட்டாண்மை மூலம் உயிர்களை காத்திடுவதற்கு தொழில்நுட்பத்தின் சக்தியைப் பயன்படுத்துவதை நாம் நோக்கமாகக் கொண்டுள்ளோம். அதற்கமைய 1990 சுவ செரிய அம்பியூலன்ஸ்சேவையை சிறந்த இணைப்பு உள்கட்டமைப்புடன் மேம்படுத்துவதே எங்கள் இலக்காக அமைந்துள்ளது. இதன்மூலம் இந்த உயிர்காக்கும் சேவையினை நாடு முழுவதிலும் உள்ள அதிகமான மக்களுக்கு அவர்களால் வழங்கக்கூடியதாக இருக்கும்" - என்றார்.



டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்க, 1990 சுவ செரிய அறக்கட்டளையின் தலைவர் துமிந்திர ரத்நாயக்கவிடம் அனுசரணையை கையளிப்பதை படத்தில் காணலாம். மேலும் படத்தில் (இ-வ) டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி இடர் மற்றும் இணக்கப்பாடு குழுவின் தலைவர் அசங்க பிரியதர்ஷன மற்றும் 1990 சுவ செரிய அறக்கட்டளையின் பிரதம நிறைவேற்று அதிகாரி சொஹான் டி சில்வா ஆகியோரையும் காணலாம்.

1990 சுவ செரிய அறக்கட்டளையின் தலைவர் துமிந்திர ரத்நாயக்க தெரிவிக்கையில், "டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியை எங்களின் உத்தியோகபூர்வ இணைப்புப் பங்காளியாக வைத்திருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ஏனெனில், இந்த கூட்டாண்மையானது அவசர சிகிச்சை தேவைப்படுகின்ற இன்னும் அதிகமான இலங்கையர்களை சென்றடைய எங்களுக்கு உதவிக்கரமாக அமையும். அதற்கமைய டயலொக் வழங்கும் ஆதரவுடன் புதிதாக நிறுவப்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விரைவான பதிலளித்தல் நேரத்தை வழங்க முடியும். இறுதியில் எம்மால் இன்னும் அதிக உயிர்களைக் காத்திடுவதற்கு அது வழிசமைக்கும். சமூகப் புத்தாக்கம் மற்றும் பொறுப்புணர்வைத் தூண்டுவதில் டயலொக்கின் இத்தகைய அர்ப்பணிப்புக்கு நாங்கள் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம். நமது மக்களில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதில் இவ்வாறு தொடர்ந்தும் ஒன்றாகச் செயல்பட நாங்கள் எதிர்பார்த்துள்ளோம்" என்றார். சுவ செரிய பற்றிய கூடுதல் விபரங்களை https://www.1990.lk/ மூலம் அணுகலாம்.

Dialog

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, ஏப்ரல் 25ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# இன்றைய ஹர்த்தாலும் அதற்கான காரணமும்!

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு எதிராகவும், தமிழ் மக்களின் பாரம்பரிய வாழிடங்கள், சமயத் தலங்கள், தொல்லியல் தலங்களை ஆக்கிரமிப்பதற்கு எதிராகவும் இன்று வடக்கு - கிழக்கில் (25) கதவடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இன்றைய போராட்டத்துக்கு ஆதரவளித்து, முழுமையான கதவடைப்பை மேற்கொள்வதாக வடக்கு - கிழக்கிலுள்ள அனைத்து பிரதான நகரங்களிலுமுள்ள வர்த்தகர் சங்கங்கள், முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கங்கள், சந்தை வியாபாரிகள், தனியார் போக்குவரத்து சங்கங்கள் மற்றும் சிகை அலங்கரிப்பாளர் சங்கங்கள் அறிவித்துள்ளன.

இந்த ஹர்த்தால் இரண்டு முக்கியமான விடயங்களை மையப்படுத்தி முன்னெடுக்கப்படுகின்றது. ஒன்று பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் என்ற அரசாங்கத்தின் அராஜகத் திட்டத்தை தோற்கடிப்பது. மற்றையது தமிழ் மக்களின் மரபுவழித் தாயகமான வட கிழக்கு மாகாணங்களில் எமது வரலாற்றுப் பாரம்பரியத்தையும், தொன்மையையும் சிதைக்கும் நோக்கத்துடன் ஆலயங்கள் மீது தொடுக்கப்படும் தாக்குதல் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவது என்பதாகும்.

இவ்விரு ஆபத்துகளையும் எதிர்த்து தோற்கடிப்பதைத் தவிர தமிழ்ச் சமூகத்திற்கு தெரிந்த தொலைவில் வேறு வழிகள் இல்லை. உரிமை உணர்வு கொண்ட சமூகம் என்ற அடிப்படையில் இதனை செய்தாக வேண்டும். இந்த உறுதியான எதிர்ப்பை சர்வதேசம் உணர்ந்து கொள்ளக்கூடிய விதத்தில் வெளிப்படுத்துவதே இப்போது உடனடியாக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கையாகும். இந்த எதிர்ப்பு நடவடிக்கையே ஒரு பூரண ஹர்த்தாலாக முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த ஹர்த்தால் வெற்றிபெற நாமனைவரும் ஒற்றுமையாகவும் உறுதியாகவும் கட்டுப்பாடாகவும் செயற்பட வேண்டுமென ஏற்பாட்டாளர்கள் கூட்டாகக் கோரியுள்ளனர். வடகிழக்கு மாகாணங்களில் வர்த்தக நிலையங்களை அடைத்து, போக்குவரத்துகளை நிறுத்தி, கல்வி நடவடிக்கைகளை கைவிட்டு, ஒட்டுமொத்தமாக எமது பிரதேசம் ஸ்தம்பித்து நிற்பதை நாமனைவரும் உறுதிப்படுத்த வேண்டும்.

இந்த அமைதிவழிப் போராட்டத்தில் சமூகத்தின் சகல தரப்பினரும் பங்கேற்கவேண்டும் என்பது அவர்களின் வேண்டுகோள்.

வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள், பணியாளர்கள், போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வாகன உரிமையாளர்கள், பணியாளர்கள், முச்சக்கரவண்டி சாரதிகள், சந்தை வர்த்தகர்கள் பலதுறை சார்ந்த தொழிலாளர்கள், மாணவர்கள் என அனைவரும் தமது வழக்கமான பணிகளை நிறுத்தி தமது எதிர்ப்பை வெளிப்படுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஹர்த்தாலில் தமிழ்ச் சமூகம் எந்த கோரிக்கைகளை முன்வைக்கிறதோ அதே விடயம் முஸ்லிம் சமூகத்தினதும் தேவை என்பதை கவனத்திற்கொள்ள வேண்டும். முஸ்லிம்களுக்கு சொந்தமான காணிகள் அபகரிக்கப்படும் அதேவேளை அவர்களின் வாழ்விடங்களை அண்டி சட்டவிரோதமான மத நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றுக்கும் சேர்த்து எதிர்ப்புத் தெரிவிக்கப்படவேண்டும். கடந்த காலங்களில் பயங்கரவாத தடைச்சட்டத்தினால் முஸ்லிம் மக்களும் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

இன்றைய தினம் ஹர்த்தால் நடத்தப்படுவது தொடர்பில் சில தரப்புகள் அதிருப்தி வெளியிட்டிருப்பதை காணமுடிகிறது. அரசாங்கத்துக்கு எதிரான போராட்டமொன்றை ஜனநாயக அடிப்படையில் செய்யாமல் வேறு எந்த அடிப்படையில் செய்வதென்று புரியவில்லை. வீதிகளை முடக்கி இயல்பு வாழ்க்கை நிலையை குழப்பாமல் ஒரு நாள் ஹர்த்தாலை மேற்கொள்வது அரசாங்கத்துக்கு செய்தியொன்றை சொல்வதற்கு பயன்படும். இதிலும் விதண்டாவாதங்களை செய்வது அர்த்தமற்றது.

வடக்கு - கிழக்கில் தொல்பொருள் திணைக்களம், தமிழ் பேசும் சிறுபான்மை மக்களின் பாரம்பரிய வாழ்விடம் சார்ந்த தொன்மைகள் – தொன்மைச் சான்றுகளை சிதைத்து பௌத்த மத திணிப்பை 2010ஆம் ஆண்டு முதல் செய்து வருகிறது. குறிப்பாக வடக்கு மாகாணத்தில் மட்டும் 82 இடங்களை இதுவரை தொல்லியல் ரீதியாக பாதுகாக்க வேண்டிய இடங்களாக அறிவித்து இருக்கிறார்கள். இதில் முல்லைத்தீவு மாவட்டம் - 47 இடங்கள், மன்னார் மாவட்டம் - 19 இடங்கள், யாழ்ப்பாண மாவட்டம் - 9 இடங்கள், வவுனியா மாவட்டம் - 7 இடங்கள் என்பன அடங்குகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரை அடையாளப்படுத்தப்பட்டுள்ள 47 இடங்களில் ஒரு சில இடங்களை தவிர சகல இடங்களிலும் பௌத்த மதத்திற்குரிய தொல்லியல் சிதைவுகள் தமிழ் சைவ ஆலய வளாகங்கள் உட்பட்ட பல பகுதிகளில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தொல்லியல் திணைக்களம் உரிமை கோருகிறது. யாழ். மாவட்டத்தில் 9 இடங்களில் தொல்லியல் ரீதியாக பாதுகாக்க வேண்டிய பண்டைய நாகரிக எச்சங்களும் சிதைவுகளும் இருப்பதாக தொல்லியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதேபோல வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கு மற்றும் நெடுங்கேணி பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட வெடிவைத்தகல்லு, மருதோடை, பனைநிண்டான், நிகவெவ போன்ற கிராமங்களில் பௌத்த சமய அடையாளங்கள் காணப்படுவதாக தொல்லியல் திணைக்களம் உரிமை கோருகிறது. மன்னார் மாவட்டத்திலும் இதே நிலைமைதான்.

வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் சிறுபான்மை மக்களின் பாரம்பரிய வாழ்விடம் என்கிற தமிழ் பேசும் மக்களின் அரசியல் கோட்பாட்டை சிதைத்து இலங்கை தீபகற்பம் சிங்களவர்களுக்கு உரியது என்கிற மகாவம்சக் கோட்பாட்டை நிரூபிக்க 2010ஆம் ஆண்டு தொடக்கம் பதவியில் இருந்த அரசாங்கங்கள் கடுமையாக முயற்சித்து வருகின்றன. அதில் அவர்கள் வெற்றியும் பெற்று வருகிறார்கள். இதேபோல் எல்லா விடயங்களிலும் அரசின் தலையீடும் ஆட்சியாளர்களின் அழுத்தங்களும் இருப்பது புதிதல்ல. இன்றைய ஹர்த்தால் இப்படியானவற்றுக்கு முடிவைத் தர வழிசெய்யும் அல்லது குறைந்தபட்ச அழுத்தத்தை வழங்கும் என நம்புகிறோம். அதற்கு மக்கள், புத்திஜீவிகள், நலன்விரும்பிகள் அணிதிரள வேண்டும்.

# பாதுகாப்பும் வாழ்வாதாரமும்!

உலகம் இப்போது எதிர்கொள்ளும் மிக முக்கியமான சவால்களில் ஒன்றாக மாறியிருக்கிறது அகதிகள் பிரச்சினை. வேலைவாய்ப்புக்காக புலம்பெயர்தல் என்பது வேறு. அரசியல் காரணங்களுக்காக, உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு சொந்த நாடுகளிலிருந்து விரட்டியடிக்கப்படுவது என்பது வேறு. வளர்ச்சியடையாத நாடுகளிலிருந்து வளர்ச்சியடைந்த நாடுகளில் குடியேறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவது சர்வதேச அளவில் விவாதப் பொருளாகியிருக்கிறது.



இலங்கையிலிருந்து அகதிகளாக வெளியேறிய ஈழத் தமிழர்களும் மியன்மாரிலிருந்து இராணுவத்தின் அடக்குமுறையை எதிர்கொள்ள முடியாமல் தொடர்ந்து வெளியேறிக் கொண்டிருக்கும் ரோஹிங்கியாக்களும் பல்வேறு நாடுகளில் தஞ்சம் புகுந்த வரலாறு அனைவருக்கும் தெரிந்ததே. மேற்கு ஆசியாவிலிருந்து உலகின் பல்வேறு பாகங்களிலும் அகதிகளாகக் குடியேறியவர்கள் ஏராளம். ஆப்கானிஸ்தானிலிருந்தும் மத்திய ஆசியாவிலிருந்தும் இலட்சக்கணக்கானோர் ஐரோப்பிய நாடுகளில் குடியேற முற்படுவதும், பல நாடுகளால் அவர்கள் தடுக்கப்படுவதும் தொடர்கிறது.

2022 நவம்பர் மாதம் சர்வதேச புலம்பெயர்தல் நிறுவனம் (இன்டர்நேஷனல் ஓர்கனைஷேசன் ஃபார் மைக்ரேஷன்) தயாரித்திருக்கும் அறிக்கையின்படி, 2014இலிலிருந்து 2022 வரை 50,000க்கும் அதிகமான அகதிகள் புலம்பெயர் பயணத்தில் உயிரிழந்திருக்கிறார்கள். அது குறித்து அவர்களது தாய்நாட்டிலோ, அவர்கள் சென்றடைய எத்தனித்த நாட்டிலோ எந்தவித விசாரணையோ, நடவடிக்கையோ எடுக்கப்படவில்லை என்பதை அந்த அறிக்கை வேதனையுடன் சுட்டிக்காட்டுகிறது.

புலம்பெயர் பயணத்தில் உயிரிழந்தோரில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் எந்த நாட்டின் குடிமக்கள் என்பதைக் கூட தெளிவாக தெரிந்துகொள்ள முடியவில்லை. அடையாளம் காணப்பட்டவர்களில் 9,000 பேர் ஆபிரிக்கர்கள். 6,500 பேர் ஆசியர்கள். அதிகமாக அகதிகளாக புலம்பெயர்வோர் ஆப்கானிஸ்தான், சிரியா, மியன்மார் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்கிறது அந்த அறிக்கை. பயணப் பாதையில் உயிரிழப்போரில் 11 சதவீதம் பேர் குழந்தைகள் என்பதையும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டத் தவறவில்லை.

உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பின் விளைவாக, ஏறத்தாழ 80 இலட்சம் பேர் உக்ரைனிலிருந்து அகதிகளாக வெளியேறியிருக்கிறார்கள். சுமார் 60 இலட்சம் பேர் உள்நாட்டிலேயே இடம் பெயர்ந்திருக்கிறார்கள். அண்டை நாடுகள் சில உக்ரைனிலிருந்து வெளியேறும் அகதிகளை ஏற்றுக்கொண்டிருப்பது சிறு ஆறுதல். உக்ரைனிலிருந்து பிரிட்டனில் தஞ்சமடையும் அகதிகளுக்கு, தங்களது வீட்டில் அடைக்கலம் வழங்கினால், அவர்களுக்கு நிதியுதவி வழங்கத் திட்டமிடுகிறது பிரிட்டன். உக்ரைனிலிருந்து இடம்பெயர்வோருக்கு வழங்கப்படும் ஆதரவும் சலுகைகளும் ஏனைய நாடுகளிலிருந்து வரும் அகதிகளுக்கு வழங்கப்படுவதில்லை.

புலம்பெயர்தல் பெரும்பாலான நாடுகளால் மனமுவந்து ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. புலம்பெயர்ந்து குடியுரிமையும் பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்தால், தங்களது சொந்த நாட்டில் தாங்களே சிறுபான்மையினராக மாறக்கூடும் என்கிற நியாயமான அச்சம் எல்லா நாட்டினர் மத்தியிலும் காணப்படுகிறது. பெரும்பான்மை பெறாவிட்டாலும், தேர்தல் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் அளவிலான சிறுபான்மையினரின் எண்ணிக்கை அரசியல் ரீதியாக அவர்களைப் பலப்படுத்தும் என்பது பெரும்பாலான ஜனநாயக நாடுகளின் அனுபவம்.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க துணை ஜனாதிபதியான கமலா ஹாரீஸும் பிரிட்டன் பிரதமரான ரிஷி சுனக்கும் குடியேற்றம் அனுமதிக்கப்பட்டதன் விளைவு என்பதை சொல்லித் தெரியவேண்டியதில்லை. அதிக அளவில் மேற்கு ஆசியாவிலிருந்து ஐரோப்பாவுக்கு பலர் புலம்பெயர்ந்ததன் விளைவாக அங்கே முஸ்லிம்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்திருப்பதை அந்தந்த நாட்டின் பெரும்பான்மையினர் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளவில்லை. புலம்பெயர்தலையே அச்சத்துடன் பார்க்கும்போது, அகதிகள் நுழைவதை எந்தவொரு நாடும் விரும்பவில்லை என்பதில் ஆச்சரியமில்லை.

1971இல் பங்களாதேஷ் போரின் விளைவால், இலட்சக்கணக்கானோர் அன்றைய கிழக்கு பாகிஸ்தானிலிருந்து இந்தியாவில் அகதிகளாகத் தஞ்சமடைந்தனர். அப்போது பிரதமராக இருந்த இந்திரா காந்தி, ''அகதிகளாக நுழைந்திருப்பவர்கள் இந்துக்கள் உட்பட எந்த மதத்தினராக இருந்தாலும் அவர்கள் இந்தியாவிலிருந்து வெளியேறி தங்கள் நாட்டுக்குத் திரும்பியாக வேண்டும். இந்தியாவின் மக்கள்தொகை பகுப்பு (டெமோகிராஃபி) மாற்றப்படுவதை அனுமதிக்க முடியாது. இருக்கும் நிதியாதாரத்தை இந்திய மக்களுக்காகச் செலவிடாமல், அகதிகளாக வந்தவர்களுக்கும் பகிர்ந்து அளிக்கும் நிலையில் இந்தியா இல்லை'' என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

அப்போது ஏறத்தாழ ஒரு கோடி பேர் கிழக்கு பாகிஸ்தானிலிருந்து இந்தியாவில் தஞ்சமடைந்திருந்தனர். இதுகுறித்து அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் அவர் பேசும்போது ''இந்தியாவின் தாங்கும் சக்தி அதன் உச்சகட்டத்தை எட்டிவிட்டது. பாகிஸ்தானிலிருந்து நுழைந்திருக்கும் அகதிகள் மிகப்பெரிய பாரமாக மாறியிருப்பது மட்டுமல்லாமல், எங்களது அரசியல் ஸ்திரத்தன்மைக்கும் சுதந்திரத்துக்கும் அச்சுறுத்தலாகவும் மாறியிருக்கிறார்கள்'' என்று கூறியதாக 1971 நவம்பர் 7 அன்றைய 'நியூயோர்க் டைம்ஸ்' பதிவு செய்திருக்கிறது.

அரை நூற்றாண்டுக்கு முன்பு, பிரதமர் இந்திரா காந்தி எதிர்கொண்ட அதே பிரச்சினையைத்தான் இன்று உலகிலுள்ள பல நாடுகளும் எதிர்கொள்கின்றன. அகதிகளுக்குக் குடியுரிமை வழங்காவிட்டாலும் மனிதாபிமான அடிப்படையில் அவர்களுக்கு பாதுகாப்பும் வாழ்வாதாரமும் வழங்குவது குறித்து உலகம் சிந்தித்தாக வேண்டும்.

# 'தீவா கைகளுக்கு வலு' திட்டம் மூலம் வட மாகாண பெண் தொழில்முனைவோரை வலுவூட்டும் தீவா

'தீவா கைகளுக்கு வலு' பயிற்சி அமர்வுகள், பெண்கள் தமது வீட்டில் உற்பத்தி செய்யும் பொருட்கள் மற்றும் வழங்கும் சேவைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. பெண் தொழில்முனைவோருக்கு அவசியமான வளங்கள் மற்றும் பயிற்சி வாய்ப்புகளை அளித்து, தன்னம்பிக்கையுடன் அவர்களது வணிகத்தில் வளர்ச்சியை மேம்படுத்த உதவுவதே 'தீவா கைகளுக்கு வலு' திட்டமாகும். மொத்தத்தில் வட மாகாண பெண் தொழில்முனைவோரை வலுவூட்டுவதே 'தீவா கைகளுக்கு வலு' (தீவா தேத்தட்ட திரிய) பயிற்சி அமர்வுகளின் நோக்கமாகும்.



அதற்கமைய, கடந்த 2023 பெப்ரவரி 21ஆம் திகதி, Women in Management (WIM) அமைப்புடன் இணைந்து தங்கொட்டுவையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வுகளின் வெற்றியைத் தொடர்ந்து, இந்த முயற்சியின் இரண்டாம் கட்டம் யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்தத் திட்டம் ஐந்து விரிவான பயிற்சி அமர்வுகளை நடத்தியிருந்தது. அந்த வகையில், உற்பத்தியாளர்கள் முதல் தொழில்முனைவோர் வரை மனநிலை மாற்றம், நிதிக் கணக்கு புத்தக பராமரிப்பு மற்றும் நிதி முகாமைத்துவம், விலை நிர்ணயம், சந்தைப்படுத்தல் மற்றும் வாடிக்கையாளர் சேவை, டிஜிட்டல் சந்தை, வர்த்தகநாமத்தை பிரபலப்படுத்தல் போன்ற தலைப்புகளை இது உள்ளடக்கியிருந்தது.

பங்கேற்பாளர்களின் முன்னேற்றத்திற்கு அங்கீகாரமளிக்கும் வகையில், யாழ். மாவட்ட செயலகத்தின் பயிற்சி நிலையத்தில் 2023 மார்ச் 05ஆம் திகதி பரிசளிப்பு விழாவும் நடைபெற்றது. பயிற்சியை நிறைவு செய்த 51 பெண் தொழில்முனைவோரின் தொழில்முனைவு பயணத்திற்காக இந்நிகழ்ச்சியில் அங்கீகாரமளிக்கப்பட்டது. அத்துடன், இந்நிகழ்ச்சியானது, பங்கேற்பாளர்களுடன் தொடர்ச்சியாக இணைந்து, அவர்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கும் என்பதோடு, இதில் முதல் மூன்று இடங்களைப் பெறும் 3 பெண் தொழில்முனைவோருக்கு, அவர்களது தொழில் முனைவுப் பயணத்தை ஆதரிக்கவும் முன்னேற்றவும் அவசியமான மூலதன நிதி வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

**Hemas Consumer பற்றி**

வீடுகள் மற்றும் தனிநபர் பராமரிப்புத்துறையில் இலங்கையின் முன்னணி உற்பத்தியாளரான Hemas Consumer Brands ஆனது, பல ஆண்டுகளாக வலுவான நோக்கம் கொண்ட வர்த்தக நாமங்கள் மற்றும் முற்போக்கான நிலைபேறான தன்மையான நடைமுறைகள் மூலம் நுகர்வோர் இதயங்களை வென்றுள்ளது. Hemas Consumer Brands ஆனது, உலகத்தரம் வாய்ந்த தயாரிப்பு வகைகளின் மூலம், ஆரோக்கியமான வாழ்க்கை மற்றும் தனிநபர் பராமரிப்புத் தீர்வுகளை வாழ்க்கையில் கொண்டு வர முயற்சிக்கிறது. வளர்ச்சியின் மூலம் ஈர்க்கப்பட்ட புத்தாக்கம் கொண்ட குழுக்கள் மூலம், உள்ளூர் தேவைகளை அறிந்து அதன் மூலம் சந்தையில் முன்னணியான மற்றும் விருது பெற்ற சிறந்த தயாரிப்புகளை உருவாக்குவதற்காக நிறுவனம் பாராட்டுகளைப் பெற்றுள்ளது. அர்த்தமுள்ள வரப்பிரசாதங்களை உருவாக்குவதன் மூலமும் நம்பகமான கூட்டாண்மைகளை வளர்ப்பதன் மூலமும் சூழலுக்கு உகந்த உலகத்தை உருவாக்குவதன் மூலமும் அது நாடு முழுவதிலுமுள்ள சமூகங்களின் வாழ்க்கையை சென்றடைகிறது.




## இன்றைய நாளில்...

- 1945 – ஐக்கிய நாடுகள் அவையை நிறுவுவதற்கான ஆலோசனைக் கூட்டம் சான் பிரான்சிஸ்கோவில் 50 நாடுகளின் பங்களிப்போடு ஆரம்பமானது.
- 1954 – முதலாவது செயல்முறை சூரிய மின்கலம், பெல் ஆய்வுகூடத்தில் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.
- 1961 – ரொபர்ட் நொய்ஸ் தொகுப்புச் சுற்றுக்கான காப்புரிமத்தைப் பெற்றார்.
- 1983 – பயனியர்-10 விண்கலம் புளூட்டோவின் சுற்றுப்பாதையைத் தாண்டிச் சென்றது.
- 1988 – இரண்டாம் உலகப் போரில் இழைத்த போர்க்குற்றங்களுக்காக ஜோன் டெம்ஜானுக் என்பவருக்கு இஸ்ரேல் மரண தண்டனை விதித்தது.
- 2005 – இத்தாலிய ஆக்கிரமிப்பாளர்களால் 1937இல் களவாடப்பட்ட 1700 ஆண்டுகள் பழைமையான சதுர நினைவுத்தூபியின் கடைசித் துண்டு எத்தியோப்பியாவுக்கு கொண்டுவரப்பட்டது.
- 2006 – கொழும்பில் இராணுவத் தலைமையகத்தில் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டதில் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா படுகாயமடைந்ததுடன், 5 பாதுகாவலர்கள் கொல்லப்பட்டனர்.
- 2015 – நேபாளத்தில் 7.8 ரிக்டர் அளவு நிலநடுக்கம் ஏற்பட்டதில் 9,100 பேர் உயிரிழந்தனர்.

# இலங்கையில் நெற்பயிர்ச் செய்கையை மேம்படுத்த ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் FAO ஒன்றிணைவு

## நான்கு மில்லியன் யூரோ நிதியில் திட்டம்

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பானது (FAO) ஐரோப்பிய ஒன்றியத்துடன் (EU) ஒன்றிணைந்து நெற்பயிர்ச் செய்கைத்துறையின் உற்பத்தித்திறன் மற்றும் நிலைபேண்தன்மையை ஊக்குவிப்பதன் மூலமாக இலங்கையின் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான புதிய நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை நேற்று (24) ஆரம்பித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நான்கு மில்லியன் யூரோ (அண்ணளவாக 1.5 பில்லியன் ரூபா) நிதிப்பங்களிப்புடனான இந்த முன்னெடுப்பானது கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர, இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் டெனிஸ் சாய்பி மற்றும் FAOஇன் இலங்கைக்கான பிரதிநிதி விமலேந்திர ஷரண் ஆகியோரது ஆசியுடன் அம்பாந்தோட்டை விவசாய தொழில்நுட்பப் பூங்காவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கமத்தொழில் அமைச்சு மற்றும் மகாவலி அதிகாரசபையினால் ஆதரவளிக்கப்பட்டு FAO இனால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற, நிகழ்ச்சித்திட்டமானது சமீபத்திய பொருளாதார நெருக்கடியினால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள பொலன்னறுவை, பதுளை, அம்பாறை, மாத்தளை, புத்தளம், குருநாகல் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய ஏழு மாவட்டங்களின் 71,000 சிறு பரிமாண நெற்பயிர்ச் செய்கையாளர்களையும் 1,200 நெல் விதை விவசாயிகளையும் இலக்காகக் கொண்டுள்ளது.

விவசாயிகள் களப் பாடசாலைகளின் உத்தியோகபூர்வ ஆரம்பமாக விளங்கிய நிகழ்வில் இலங்கைக்கான EU தூதுவர் டெனிஸ் சாய்பி உரையாற்றும்போது,








"இப்புதிய நடவடிக்கையினால் விவசாயிகளது அதிக விளைச்சலுக்காக மாத்திரமின்றி, தங்களைச் சூழவுள்ள சுற்றுச்சூழலை பாதுகாத்து தங்களது உற்பத்தியையும் வருமானத்தையும் அதிகரிக்கக்கூடிய சிறப்பான விளைச்சலுக்காகவுமே நாம் உதவ விரும்புகிறோம். பசுமை மற்றும் காலநிலைத்திறன் மிக்க விவசாயத்தை நோக்கிய மாற்றத்தை FAO மற்றும் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து படிப்படியாக ஊக்குவிக்க முடியுமென நாம் நம்புகின்றோம். போதுமானளவு உணவை உற்பத்திசெய்யும் மாற்றமானது இப்புவியையும் அதன் மக்களையும் பாதுகாக்கும்" என்று குறிப்பிட்டார்.

விவசாயப் பயனாளிகள் பாரம்பரிய பயிரிடல் முறைமையிலிருந்து காலநிலைத் திறன், நவீன விவசாய தொழில்நுட்பங்களுக்கு மாறுவதற்கான உபகரண மற்றும் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொள்வர். 0.5 ஹெக்டேயர் வரையில் பயிரிடும் தகைமையுடைய விவசாயிகள் 50 கி.கி யூரியா உரத்தையும் உரப் பாவனையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான அத்தியாவசிய உபகரணங்களையும் பெற்றுக்கொள்வர்.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் பொருட்டு பெறப்பட்ட 3,820 தொன்கள் யூரியா உரமானது தெரிவுசெய்யப்பட்ட சிறு நெல் வயல்நில விவசாயிகள் மற்றும் நெல் விதை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக கமத்தொழில் அமைச்சிடம் ஏற்கனவே கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக உதவியளிக்கப்படும் நெல் விதை விவசாயிகளும் உள்ளூரில் உற்பத்திசெய்யப்பட்ட, உயர் தர நெல் விதைகளைப் பயிரிடல் முறைமையின் வினைத்திறன் மற்றும் இலாபத்தினை மேம்படுத்துவதற்கான பரசூட் தட்டுகள் போன்ற உபகரண உதவிகளையும் பெற்றுக்கொள்வர். மேலும், வினைத்திறனை அதிகரிக்கவும் இரசாயன உரப் பாவனையில் தங்கியிருப்பதனை குறைப்பதற்குமான ஒருங்கிணைக்கப்பட்ட நாற்று போசணை முகாமைத்துவ (IPNM) மூலோபாயம் குறித்த அறிவைப் பகிர்ந்துக்கொள்வதற்காக அனைத்துப் பயனாளிகளும் விவசாயிகள் களப் பாடசாலையில் இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

இலங்கையின் நெற்பயிர்ச் செய்கைத்துறையின் நிலைபேண்தன்மையை மேம்படுத்துவதனை இலக்காகக்கொண்ட முழுதளாவிய நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து FAO மற்றும் EU என்பற்றுக்கு தன்னுடைய பாராட்டுதல்களை கமத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர வெளிப்படுத்தினார்.

# உலக பூமி தினம் யாழில் அனுஷ்டிப்பு





கடல்சார் சுற்றுசூழல் பாதுகாப்பு அதிகார சபை, யாழ். மாநகர சபை, யாழ். மாவட்ட செயலகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், இலங்கை கடற்சூழல் மாசடைவதை தடுக்கும் வகையில் உலக பூமி தினம் நேற்று (24) யாழ். குருநகர் 05 தொடர்மாடிக் கட்டடத்தொகுதி கடற்கரைப் பகுதியில் நடைபெற்றது.

இதில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பற்றிக் நிரஞ்சன், உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் பிரணநாதன், வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மஹிந்த குணரட்ண, யாழ். பிரதேச செயலர் ச.சுதர்சன், யாழ். மாநகர சபையின் ஆணையாளர் ஜெயசீலன், கிராமசேவையாளர், பொலிஸ் உத்தியோகத்தர்கள், இராணுவ வீரர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# மூத்த எழுத்தாளர் குப்பிளான் சண்முகன் காலமானார்



மூத்த எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகம் காலமானார்.

நோய்வாய்ப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த நிலையில், நேற்று (24) அதிகாலை காலமாகியுள்ளார்.

சிறுகதைகள், நாவல், இலக்கிய கட்டுரைகள் மூலம் ஈழத்தமிழ் இலக்கியத்தில் குப்பிளான் ஐ.சண்முகன் முக்கிய தடம் பதித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மந்திரம் சரியாக உச்சரிக்கத் தவறியதால் 8 வயது துறவி 3 பிக்குகளால் சித்திரவதை

(கலஹா செய்தியாளர்)

துறவறம் பூண்டு 45 நாட்களேயான எட்டுவயது சிறிய பௌத்த பிக்கு ஒருவர் மந்திரத்தினை சரியாக உச்சரிக்கத் தவறியமையால் சக மூன்று பிக்குகளால் தொடர்ந்து கடுமையான முறையில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுவந்த நிலையில், கம்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக பேராதனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் புஸல்லாவை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இரட்டைப்பாதை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள துறவி, புத்த பூஜையின்போது சொல்லி கொடுக்கும் மந்திரத்தை சரியாக உச்சரிக்கத் தவறியமையால் சினமுற்ற மேற்குறிப்பிட்ட மூன்று துறவிகளும் இணைந்து விகாராதிபதி இல்லாத சந்தர்ப்பங்களில் சிறுநீரை போத்தலில் கொண்டுவந்து அருந்தச் செய்தும் எலுமிச்சைப் பழத்தை தரையில் பிழிந்து நாக்கினால் நக்கச்செய்தும் தும்புதடி முறியும்வரை தாக்கி, கன்னத்தில் அறைந்தும் மான்கொம்பு கத்தரிகோலினால் உடம்பில் குத்தியும் சித்திரவதை செய்துள்ளனர்.

இதனால் பற்கள் உடைந்தும் உதடுகள் காதுகள் கிழிந்தும் உடலில் பல இடங்களிலும் காயங்கள் காணப்படுவதாகவும் இதனால் கடந்த 20ஆம் திகதி கம்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கடந்த சனிக்கிழமை 22ஆம் திகதி பேராதனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்றுவருவதாக காயமுற்ற துறவியின் தந்தை தெரிவித்தார்.

# அஸ்வசுமா நலத்திட்டத்தில் மிகவும் ஏழ்மையான குடும்பங்களுக்கு 15 ஆயிரம் ரூபா நிதியுதவி

## எதிர்வரும் ஜூலை 01 முதல் நடைமுறை

அஸ்வசுமா நலத்திட்ட உதவித் திட்டம் ஜூலை 01முதல் செயற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கையொப்பத்துடன், இதற்கான விசேட வர்த்தமானி கடந்த வெள்ளிக்கிழமை (21) வெளியிடப்பட்டது.

அதன்படி, நலத்திட்ட உதவித் திட்டத்திற்கு 4 சமூகப் பிரிவுகள் அடையாளம் காணப்பட்டு, அந்தப் பிரிவுகள் இடைநிலை பாதிக்கப்படக் கூடிய, ஏழை மற்றும் மிகவும் ஏழ்மை என பெயரிடப்பட்டுள்ளன.

இந்த நிலையில், இடைநிலைப் பிரிவிலுள்ள குடும்ப அலகுக்கு, 31 டிசம்பர் 2023 வரை மாதந்தோறும் ரூ.2,500 உதவித்தொகையும் பாதிக்கப்படக்கூடிய என அடையாளம் காணப்பட்டுள்ள குடும்ப அலகுக்கு 2025 மார்ச் வரை மாதாந்தம் 5,000 ரூபாவும் வழங்கப்படும்.

மேலும் ஜூலை 1 முதல் 3 ஆண்டுகளுக்கு, ஏழைப் பிரிவின் கீழ் உள்ள ஒரு குடும்ப அலகுக்கு ரூ.8,500 மற்றும் மிகவும் ஏழ்மையான பிரிவின் கீழ்வரும் குடும்ப அலகுக்கு ரூ.15,000 உதவித் தொகையும் வழங்கப்படும் என வர்த்தமானி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கழிவு நீரால் அசௌகரியம்



(உடப்பு செய்தியாளர்)

ஆராச்சிக்கட்டு பிரதேச சபைக்குட்பட்ட உடப்பு கிராமத்திலுள்ள சில வடிகானில் நீர் தேங்கி நிற்பதால் பிரதேசவாசிகள் அசௌகரியத்துக்குட்படுகின்றனர்.

ஆலயத்துக்கு அருகில் காணப்படுகின்ற, மரக்கறி சந்தைக்கு முன்பாகவே கழிவுநீர் தேங்கியுள்ளதால் நுளம்பு பெருகும் சாத்தியம் உள்ளது.

எனவே, இதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கள்ளக்காதலால் கணவனை கொல்ல கூலிப்படையை அனுப்பிய மனைவி உள்ளிட்ட நால்வர் கைது

கள்ளக்காதலால் கணவனை கொலை செய்ய ஒரு இலட்சம் ரூபாவுக்கு ஒப்பந்தம் வழங்கிய மனைவியை நேற்று முன்தினம் (23) ஆனமடுவ பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இவர் தனது கணவரின் நெருங்கிய நண்பருடன் தொடர்பு வைத்திருந்தமை விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

அதன்படி, குறித்த நண்பர் உட்பட மேலும் நால்வரை பொலிஸார் கைதுசெய்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் குறித்த நண்பர் மிரிஹான பிரதேசத்தில் வசிப்பவர் என்றும், நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த குழுவினால் ஒப்பந்தம் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபரின் மனைவி வெலிமடை பகுதியைச் சேர்ந்தவர்.

கணவருடன் சேர்ந்து வாழும்போது கணவரின் நண்பருடன் திருமணத்திற்கு புறம்பான தொடர்பு இருந்தமை பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த உறவு தனது கணவருக்குத் தெரிந்தால் பிரச்சினை ஏற்படும் என்பதால், சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் பிரதான சந்தேக நபருடன் இணைந்து கொலைத் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளார்.

சந்தேக நபரின் மனைவி தனது பிள்ளைகளுடன் வெலிமடையில் வசிக்கும் பெற்றோரைப் பார்க்கச் சென்றிருந்த நிலையில், கணவனைக் கொலை செய்யத் திட்டமிடப்பட்டது.

அதன்பின்னர் குறித்த நபரை கொலைசெய்ய கணவனின் நண்பன் ஊடாக பணத்திற்காக கொலை செய்யும் கும்பலிடம் ஒரு இலட்சம் ரூபா பணம் தருவதாகக் கூறியுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்நிலையில், வாள்வெட்டுத் தாக்குதலுக்கு இலக்கான கணவர் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

இதன்போது மனைவி மற்றும் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், கழுத்தை அறுப்பதற்கு பயன்படுத்தப்பட்ட வாள்கள் மற்றும் கத்திகள் ஏரியொன்றிலிருந்து பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## 24.04.2023 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 1 7 3212 | 110 0583 |
| கனேடியன் டொலர் | 118 6707 | 132 8 84 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 33 5387 | 37 1024 |
| யூரோ | 232 2811 | 251 2671 |
| ஜப்பான் யென் | 1 2162 | 1 3436 |
| சிங்கப்பூர் டொலர் | 122 6 56 | 136 0775 |
| ஸ்ரேலிங் பவுன் | 277 8326 | 3 8 82 7 |
| சுவிஸ் பிரான்ங் | 237 77 4 | 26 7801 |
| ஐ.அ.டொலர் | 202 2236 | 217 3736 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 742 0185 |
| குவைட் | குவைட் தினார் | 0, 38 8014 |
| ஓமான் | ஓமான் றியால் | 724 3032 |
| கட்டார் | கட்டார் றியால் | 77 6 4 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 74 6454 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 76 4655 |

# மாடுகள் திருடப்படுவதை எதிர்த்து கால்நடை வளர்ப்பாளர்கள் ஆர்ப்பாட்டம்







(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் மல்லாகம் சந்தியில் கால்நடை வளர்ப்பாளர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று (24) திங்கட்கிழமை காலை மேற்கொண்டனர்.

வலிகாமம் வடக்கு பகுதிகளில் வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்படும் மாடுகள் தொடர்ந்து திருடப்பட்டு வருவதை எதிர்த்து, குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போராட்ட இடத்தில் பசு ஒன்றையும் கட்டி, போராட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் செய்த இடத்திலிருந்து காங்கேசன்துறை மூத்த பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திற்கு சென்று மகஜரையும் கையளித்தனர்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.04.23
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5095
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,622,792.00
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 2 7 7 5 0 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3337
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 98,007,557.84
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 05 13 32 38

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1550
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
வெற்றி இலக்கினம்
வெற்றி இலக்கங்கள் 9 6 2 5 8 4

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1125
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 87,214,192.00
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 18 25 29 54

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 404
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,744,117.20
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 06 47 48 62
விசேட இலக்கினம் கன்னி

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1443
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 316,600,310.00
ஆங்கில எழுத்து I
சுப்பர் இலக்கம் 12
வெற்றி இலக்கங்கள் 02 39 59 72
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# நெடுந்தீவு கொலை தொடர்பான குற்றவாளிக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டுமெனக் கோரி ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு







(யாழ். நிருபர்)

நெடுந்தீவு மக்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலம் நேற்று (24) திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு மாவிலி துறைமுகத்திலிருந்து, நெடுந்தீவு பிரதேச செயலகம், நெடுந்தீவு பொலிஸ் நிலையம் வரை இடம்பெற்றது.

நெடுந்தீவு மாவிலிதுறைக்கு முன்பாக உள்ள வீட்டில் தங்கியிருந்த ஐவரை வெட்டிக் கொலைசெய்து ஒருவரை காயமடையச் செய்த சம்பவம் தொடர்பான குற்றவாளிக்கு அதிகபட்ச தண்டனை விதிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

''நெடுந்தீவு மக்களின் பாதுகாப்பு எங்கே சென்று கொண்டிருக்கிறது'' போன்ற பல கேள்விகளை தாங்கிய ஆர்ப்பாட்ட ஊர்வலம் இடம்பெற்றது.

ஊர்வலத்தின் முடிவில் பிரதேச செயலாளர், நெடுந்தீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோரிடம் மகஜரும் கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரில், நெடுந்தீவு மக்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தால் ஒவ்வொரு சமூகத்திடமும் பொலிஸ் நிலைய சட்டத்தின் ஊடாக விழிப்புக்குழுக்கள் உருவாக்கப்பட வேண்டும்.

நெடுந்தீவின் பொது இடங்கள் இறங்குதுறை மற்றும் மனித நடமாட்டம் அதிகமாக உள்ள இடங்கள், சுற்றுலாத் தலங்கள் அனைத்துக்கும் கண்காணிப்புக் கெமராக்கள் பொருத்தப்படல் வேண்டும்.

நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தால் வரையறுக்கப்பட்ட நெடுந்தீவு இடங்களை ரோந்துப் பணியினூடாக கண்காணிப்பதற்கு இடைவிடாது ஒவ்வொரு நாளும் பொலிஸ் நிலையத்தால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

நெடுந்தீவின் சுற்றுலாத் தலங்களுக்கு ஒவ்வொரு நாளும் சென்று நெடுந்தீவு பொலிஸ் நிலைய அதிகாரிகளால் கண்காணிக்கப்பட வேண்டும்.

வெளியூர்களிலிருந்து வந்து நெடுந்தீவின் விடுதிகளில் தங்குபவர்கள் விடுதி உரிமையாளர்களால் பூரண ஆள் அடையாளத்துக்கு உட்படுத்தல் நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

நெடுந்தீவுக்கு உள்ளே வரும் வெளியே செல்லும் மக்களின் தரவுகளை நவீன தொழில்நுட்பத்துடன் கொண்டு பயணிகளை சிரமப்படுத்தாது அதிவிரைவாக தரவுகளை இறங்குதுறையில் வைத்து சேமித்து கொள்ளும் நடைமுறையை கொண்டுவர வேண்டும் – என்றுள்ளது. இந்த ஊர்வலத்தில் நெடுந்தீவிலுள்ள சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், பொது அமைப்புகள், இளைஞர் கழகங்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# யாழில் நடிகர் திலகத்தின் நூல் வெளியீட்டு விழாவில் குழப்பம் விளைவித்த பெண்





(வட்டுக்கோட்டை நிருபர்)

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் வாழ்க்கை வரலாற்று நூல் வெளியீட்டு விழா யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நிலையில் தன்னை ஏற்பாட்டாளர் எனக் கூறிய பெண் ஒருவர் ஊடகங்களை வெளியேறுமாறு கூறியதால் பரபரப்பு ஏற்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் மூத்த புதல்வர் மற்றும் நூலாசிரியர் ஆகியோர் நூல் வெளியீட்டு விழாவுக்காக யாழ்ப்பாணம் வந்த நிலையில், குறித்த நிகழ்வு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த நிகழ்வுக்கு ஊடகவியலாளர்கள் அழைக்கப்பட்ட நிலையில் திடீரென அங்கு நின்ற பெண், சில ஊடகவியலாளர்களை அடையாள அட்டையை காட்டுமாறு வற்புறுத்தினார்.

இந்நிலையில், சில ஊடகவியலாளர்கள் நாங்கள் அடையாள அட்டையைக் காட்டுவதில் பிரச்சினையில்லை. நீங்கள் யார் என்பதை முதலில் கூற முடியுமா என கேள்வி எழுப்ப, நீங்கள் வெளியேறலாம் என குறித்த பெண்மணி கடுந்தொனியில் எச்சரித்துள்ளார். அங்கு நின்ற பத்துக்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் குறித்த நிகழ்வைப் புறக்கணித்து வெளியேறினர்.

அதன்பின் ஏற்பாட்டாளர்கள் சிலர் ஊடகவியலாளர்களை அணுகி நடந்த சம்பவத்துக்கு மன்னிப்புக் கோரியதுடன் நிகழ்வுக்கு வருமாறு கோரினர்.

# புதுமை மாதா சிலை பற்றிய துண்டுப் பிரசுரம் போலியானது

## ஆயர் இல்லம் விளக்கம்

(யாழ். நிருபர்)


'புதுமை மாதா சிலை நிறுவும் நிகழ்வு' என்ற தலைப்பில் யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையக் கட்டடத்துக்குப் பின்புறமாக புதுமை மாதா சொரூபம் ஒன்று திறந்துவைக்கப்படவுள்ளதாகக் குறிப்பிட்டு, சமூக ஊடகங்களில் உலாவும் துண்டுப் பிரசுரம் போலியானதென்று யாழ். ஆயர் இல்லம் குறிப்பிட்டுள்ளது.

துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளபடி, யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் அதிவணக்கத்துக்குரிய ஜஸ்ரின் ஞானப்பிரகாசத்தினால் புதுமை மாதா சொரூபம் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையக் கட்டடத்துக்குப் பின்புறமாகத் திறந்துவைக்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளமை உண்மைக்குப் புறம்பானதொன்றாகும் என்றும் ஆயர் இல்லம் மறுத்துள்ளது.

நேற்று முன்தினம் (23) காலைமுதல் புதுமை மாதா சிலை நிறுவும் நிகழ்வு என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரமொன்று முகப்புத்தகம் உட்பட சமூக ஊடகங்களில் பேசுபொருளாக உலா வந்தது.

இதன் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில், யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் இல்ல குருமுதல்வரிடம் தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் அந்தத் துண்டுப் பிரசுரம் போலியானதொன்று எனவும் அதில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் உண்மைக்குப் புறம்பானவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், மதங்களுக்கிடையிலான நல்லுறவைக் குழப்பும் வகையில் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும் தீய சக்திகள் குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.



இந்தத் துண்டுப் பிரசுரத்தில் "402ஆவது யுபிலி ஆண்டு திருப்பலியின் பின்னர் யாழ். குருநகர் புதுமை மாதா ஆலய வரலாறுகள் அடங்கிய நினைவுச் சிலையை ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி அருளானந்தம் ஜாவிஸ் அடிகளார், யாழ். மறை மாவட்ட ஆயர் அதிவணக்கத்துக்குரிய ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், புதுமை மாதா சிலை திறந்துவைக்கப்படும்" என எழுத்துப் பிழைகளுடனும், மத முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையிலான வாசகங்களும் உள்ளடங்கியிருந்தன.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இராகலையில் புரட்சிகர மே தின அனுஷ்டிப்பு

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி அழைப்பு

(ஆ.ரமேஸ்)

மலையக தமிழ் இனத்தை இலங்கையில் தேசிய இனமாக அங்கீகரித்து இந்த நாட்டில் ஏனைய சமூகத்தினர் அனுபவிக்கும் தேசிய உரிமைகளில் உள்வாங்க வேண்டும். அதேநேரத்தில் பெருந்தோட்டத் தொழிலாளர்களை தொழில் உள்ளிட்ட உரிமை சார் அடக்கு முறைகளில் இருந்து விடுபடுத்தி இக்காலகட்டத்தில் பொருளாதார சிக்கலில் இருந்து மீள அவர்களின் நாளாந்த உழைப்புக்கு ஏற்ற வேதன உயர்வை வழங்க வேண்டும் என்ற பிரதான கோரிக்கைகளுடன் மேலும் பல முக்கிய கோரிக்கைகளை மேதினக் கோரிக்கையாக முன்வைத்து புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி அதன் புரட்சிகர மேதின அனுஷ்டிப்பை இராகலை நகரில் மே மாதம் முதலாம் திகதி நடத்தவுள்ளதாக கட்சியின் தேசிய அமைப்பாளர் வைத்திலிங்கம் மகேந்திரன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

புதிய ஜனநாயக மாக்சிய லெனினிச கட்சி இம்முறை புரட்சிகர மேதினப் பேரணியையும், பொதுக்கூட்டத்தையும் யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மலையகம் ஆகிய இடங்களில் நடத்த தீர்மானித்துள்ளது.

அந்தவகையில், உலக உழைப்பாளர்கள் தினத்தை மலையகத்தில் இராகலை நகரில் புரட்சிகர பேரணியுடன் மேதினக் கூட்டத்தையும் எமது கட்சி நடத்தவுள்ளது.

இதன்போது 200 வருட வரலாற்றைக் கொண்ட மலையக தமிழ் இனத்தை இலங்கையில் தேசிய இனமாக அங்கீகரித்து இந்த நாட்டில் ஏனைய சமூகத்தினர் அனுபவிக்கும் தேசிய உரிமைகளில் உள்வாங்க வேண்டும்.

அத்தியாவசியப் பொருட்களின் விலை மற்றும் மின்சாரக் கட்டணத்தை உடனே குறைத்து நாட்டு மக்களின் சுமைகளை குறைக்க வேண்டும். இலவசக் கல்வி, சுகாதாரம் போக்குவரத்து துறைகளை தனியாருக்கு விற்பதை நிறுத்த வேண்டும்.

அரச தனியார் மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை செலவுக்கேற்ப சம்பளத்தை உயர்த்தி மக்களின் பொருளாதாரத்தை உறுதிசெய்ய வேண்டும்.

மலையக மக்களின் காணி மற்றும் வீட்டுரிமையை நிரந்தரமாக்கி உறுதிப்படுத்த வேண்டும்.

விவசாயத்துக்கான பசளை, மருந்து வகைகளின் விலையை உடனடியாக குறைத்து விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அடிபணிந்து நாட்டின் வளங்களை அடகு வைப்பதை நிறுத்தி நாட்டின் வளங்களை காத்து பொருளாதாரத்தை விருத்திக்க வேண்டும்.



பயங்கரவாத தடைச் சட்டத்தை உடனே இரத்துச்செய், பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தை கைவிட்டு மக்களுக்கு எதிராக திணிக்கப்படும் அடக்குமுறைக்கு எதிராக குரல் எழுப்ப சுதந்திரம் வழங்க வேண்டும்.

மண்ணெண்ணெய், டீசல், பெற்றோல், எரிவாயு விலைகளை உடனடியாக குறைத்து போக்குவரத்து சீர்செய்து தடைப்பட்ட அபிவிருத்திகளை முன்னெடுக்க வேண்டும்.

மேலும் பெருந்தோட்ட மக்களின் சுகாதார மற்றும் வைத்திய வசதிகளை தேசியமயமாக்க வேண்டும்.

இவ்வாறான கோரிக்கைகளை முன்வைத்து அனைத்து அடக்குமுறைகளையும் எதிர்த்து இராகலையில் மேதினக்கூட்டத்தில் அணிதிரள்வோம் என அழைப்பு விடுப்பதாகவும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# யார் பொறுப்பு?



(மனுர சுதத் செல்லஹேவா)

ஹட்டன் பிரதான பஸ் தரிப்பிடம் மழைக்காலங்களில் காட்சியளிக்கும் விதம் இது. அண்மைக் காலமாக பெய்துவரும் அடைமழையில் குண்டும் குழியுமாக காட்சியளிக்கும் பஸ் தரிப்பிடம் மக்கள் பாவனைக்கு பொருத்தமற்று காணப்படுகிறது.

மிக நீண்டகாலமாகவே இந்த பஸ்தரிப்பிடம் இவ்வாறு மோசமான நிலையில் உள்ளது. நுவரெலியா மாவட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தபோதிலும் இதுவரை அவர்கள் கவனம் செலுத்தாமை குறித்து பயணிகள் விசனம் வெளியிட்டுள்ளனர்.



தமிழ் – சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு பொதுமக்களுக்கு சம்பிரதாயபூர்வமாக மரக்கன்றுகள் வழங்கிவைக்கும் நிகழ்வு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் இரத்தினபுரி சமன் தேவாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# மோதல் தொடர்பில் விசாரணை ஆரம்பம்

(கண்டி செய்தியாளர்)

நுவரெலியா வசந்தகால கொண்டாட்டங்களின் போது நகர அபிவிருத்தி அதிகார சபை வளவில் இடம்பெற்ற மோதல் தொடர்பாக சுயாதீன விசாரணை ஒன்றை நடத்துமாறு மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தமது செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட இம்மோதல் காரணமாக தம்பதியினர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மத்திய மாகாண ஆளுநரின் செயலாளர் காமினி ராஜரட்ன இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்.

# பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

நடராஜா மலர்வேந்தன்

பசறை கல்வி வலயத்துக்குட்பட்ட கோணக்கலை தமிழ் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் மே மாதம் 05ஆம் திகதி பாடசாலை அதிபர் சந்தனம் ராஜேந்திரா தலைமையில் வித்தியாலய பிரதான மண்டபத்தில் காலை 10.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

இதன்போது பழைய மாணவர் சங்க புதிய நிர்வாகக்குழு தெரிவு இடம்பெறவுள்ளது. தொடர்ந்து பாடசாலையின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு பழைய மாணவர்களின் பங்களிப்பு தொடர்பான கலந்துரையாடலும் நடைபெறும்.

இக்கூட்டத்தில் பாடசாலையின் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

# போலி நாணயத்தாள் அச்சிட்ட புகைப்பட நிலையம் முற்றுகை

(கண்டி செய்தியாளர்)

அலவத்துகொடை பொலிஸ் பிரதேசத்தில் புகைப்பட நிலையம் ஒன்றில் ஐயாயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் அச்சிடும் கணினி உபகரணங்கள் மற்றும் 43 பண நோட்டுகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அலவத்துகொடை நகரில் ஐயாயிரம் ரூபா நாணயத்தாள் ஒன்றை மாற்ற முயற்சித்தவேளை ஒருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டார். அதன்போது மேற்கொண்ட விசாரணைகளின்படி இந்தப் புகைப்பட நிலையம் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது.

அந்த புகைப்பட நிலையத்தில் நீண்ட காலமாக போலி நாணயத்தாள்கள் அச்சிடப்பட்டு வந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இச்சம்பவம் தொடர்பில் மூவர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அலவத்துகொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# விவசாயிகளின் கவனயீனத்தால் கால்நடைகளுக்கான தோல்நோய் மாகாணங்களுக்கு இடையே பரவல்

## கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

வடமத்திய மாகாணத்தின் பல பிரதேச செயலகப் பிரிவுகளில் தற்போது கால்நடைகளுக்குப் பரவிவரும் தோல்நோயைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் பரவலாகக் காணப்பட்ட இந்நோய் தற்போது அந்த மாகாணத்தில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகளை வடமத்திய மாகாணத்திற்கு கொண்டுவர வேண்டாம் என மாகாண கால்நடை திணைக்களம் விவசாயிகளுக்கு அறிவித்துள்ள போதிலும், வடமத்திய மாகாண விவசாயிகள் அதனை புறக்கணித்ததன் காரணமாகவே மாகாணத்தில் இந்நோய் பரவியுள்ளதாக கால்நடை திணைக்களம் தெரிவித்துள்ளது.

கால்நடைகளுக்கு இடையேயான நேரடித் தொடர்பு அதிகரிப்பதே இந்நோய் பரவுவதற்குக் காரணம் என கால்நடைப் பிரிவு தெரிவித்துள்ளது.

கால்நடைகளுக்கு இடையேயான நெருங்கிய தொடர்பு, குறிப்பாக, கால்நடைகளை ஏரிகளில் விடுவது மற்றும் பயிரிடப்படாத நெல் நிலங்களில் மேய்ச்சலுக்கு விடுவது போன்ற காரணிகள் இந்நோய் பரவுவதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இந்த நோய் கேப்ரிபாக்ஸ் என்ற வைரஸால் ஏற்படுகிறது, மேலும் உண்ணி, ஈக்கள் மற்றும் பிற சிறிய இரத்தத்தை உறிஞ்சும் ஈக்கள் காரணமாக இந்த வைரஸ் கால்நடைகளுக்கு விரைவாக பரவுகிறது.

குறிப்பாக, இந்நிலையால் கால்நடைகளுக்கு ஏற்படும் மனநலக் கோளாறு காரணமாக பால் சுரக்கும் திறன் பாதிக்கப்படுகிறது.

இரண்டு வாரங்களில் இந்நோய் குணமாகும் நிலையி, கால்நடைகள் இறப்பதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு. ஆனால், பால் உற்பத்தி குறைவதால், நோயுற்ற கால்நடைகளை ஏனைய ஆரோக்கியமான விலங்குகளிடமிருந்து பிரித்து வைத்தால் இந்நோய் பரவுவதைக் கட்டுப்படுத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 8 மில்லியன் பெறுமதியான கேரள கஞ்சாவுடன் பலாலியில் ஒருவர் கைது





யாழ்ப்பாணம் பலாலி அந்தோனிபுரம் கரையோரப் பகுதியில் நேற்று முன்தினம் (23) கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் மூலம் 26 கிலோவிற்கும் அதிகமான கேரள கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வடக்கு கடற்படை கட்டளைக்குட்பட்ட SLNS உத்தராவிலுள்ள வெற்றிலைக்கேணி மற்றும் பருத்தித்துறை கடற்படைப் பிரிவின் கடற்படை வீரர்கள், P 055இன் கரையோர ரோந்து கப்பல் மூலம் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது படகொன்றில் 13 பொதிகளில் 170 கிலோ கிராம் கேரள கஞ்சா மறைத்து வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டதுடன், சந்தேகத்தின்பேரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் மொத்த பெறுமதி 08 மில்லியன் ரூபாவாகும்.

சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் அந்தோனிபுரத்தைச் சேர்ந்த 21 வயதுடையவர் என்பதுடன், கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவுடன் சந்தேகநபர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பலாலி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# நாவுல – மொரகஹகந்த நீர்த்தேக்கத்திலிருந்து இராணுவச் சிப்பாய் சடலமாக மீட்பு



நாவுல – மொரகஹகந்த நீர்த்தேக்கத்திலிருந்து நேற்று முன்தினம் (23) இரவு இராணுவச் சிப்பாய் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நீர்த்தேக்கம் மற்றும் மின்நிலையத்தின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த கிரல கொல்ல இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் எல்பிட்டிய பிரசேத்தைச் சேர்ந்த 39 வயதான ஒருவரென தெரிவந்துள்ளது.

நீர்த்தேக்கத்தின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த 10 இராணுவச் சிப்பாய்களில் ஒருவர் காணாமல்போயிருந்தமையினால் ஏனையோர் தேடுதல் பணிகளை முன்னெடுத்திருந்தனர். அதன்போது, நீர்த்தேக்கத்தின் அணைக்குக் கீழ் 300 மீற்றர் ஆழத்தில் நீர் பாயும் பாலத்தின் அடியிலிருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் நாவுல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.






அறமுன - மீட்போம் இலங்கையை - Reset Sri Lanka நாடளாவிய செயற்றிட்டத்தின் மாத்தறை தொழில்முனைவோர்க்கான கூட்டம் ஏப்ரல் 22ஆம் திகதி மாத்தறை சோலிஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

# பாகிஸ்தானுக்கு இரண்டு யானைகளை வழங்கும் இலங்கை

கராச்சி மிருகக்காட்சிசாலையில் ஆபிரிக்க யானை 'நூர் ஜெஹான்' உயிரிழந்ததையடுத்து, பாகிஸ்தானுக்கு இரண்டு யானைகளை பரிசாக வழங்குவதாக இலங்கை கூறியுள்ளதென லாஹூரிலுள்ள இலங்கை தூதரக அதிகாரி யாசின் ஜோயா, அந்நாட்டின் ஜியோ நியூஸ் தொலைக்காட்சிக்கு நேற்று முன்தினம் (23) தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

யானைகளுக்கான கோரிக்கை இலங்கைக்கு, அனுப்பப்பட்டுள்ளது.

யானைகளை வெளிநாடுகளுக்கு அனுப்ப இலங்கை நீதிமன்றம் ஏற்கனவே தடை விதித்துள்ள நிலையில், இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை இரண்டு பெண் யானைகளை பாகிஸ்தானுக்கு அனுப்பும். அவற்றில் ஒன்று கராச்சி மிருகக்காட்சிசாலைக்கும் மற்றொன்று லாகூருக்கும் வழங்கப்படவுள்ளது.

கடந்த 2017 மே மாதத்தில் உயிரிழந்த சுஷீயின் மரணத்திற்குப் பிறகு லாகூர் மிருகக்காட்சி சாலையில் யானைகள் இருக்கவில்லை என்றார்.

கராச்சியில் 17 வயதான நூர் ஜெஹானின் மரணம் குறித்து வருத்தம் தெரிவித்த அவர், உயிரியல் பூங்காவில் கவனிப்பு இல்லாததால் நீடித்த உடல்நலப் பிரச்சினைகளால் அது இறந்ததாக குறிப்பிட்டார்.

மேலும், பாகிஸ்தானுக்கு வழங்கப்படும் யானைகள் குறித்த அறிவிப்பு இலங்கை அரசாங்கத்தினால் எதிர்வரும் சில நாட்களில் வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஒரு வருடத்தில் 700 தாதியர்கள் நாட்டைவிட்டு வெளியேறினர்

## தாதியர் சேவையில் 2400 வெற்றிடங்கள்

ஜனவரி 2022 மற்றும் ஜனவரி 2023இற்கு இடையில் சுமார் 700 செவிலியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இவர்களில் 550 செவிலியர்கள் சுகாதார அமைச்சின் அங்கீகாரத்துடன் விடுமுறை எடுத்து ஐந்து வருட காலத்திற்கு மேலதிக கல்விக்காக வெளிநாடு சென்றுள்ளனர், சுமார் 150 செவிலியர்கள் எவ்வித அறிவித்தலுமின்றி வெளிநாடு சென்றுள்ளனர்.

தாதியர் சேவையில் தற்போது சுமார் 2,400 வெற்றிடங்கள் காணப்படுவதாகவும், இந்த வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சுகாதார அமைச்சின் பணிப்பாளர் (தாதியர் கட்டுப்பாடு) சாமிக்க கமகே தெரிவித்துள்ளார்.








சர்வ மத சகோதரர்களையும் உள்ளடக்கிய இப்தார் நிகழ்வு, கொள்ளுப்பிட்டி மஸ்ஜித் சம்மேளனம், தர்ம சக்தி அமைப்பின் ஏற்பாட்டில், கிரேண்ட்பாஸ் சிறி இசிபத்னராம விகாரையில் விகாராதிபதியும் தர்ம சக்தி அமைப்பின் செயலாளருமான பண்டித் மாதம்பாகம அஸ்ஸஜி தேரர் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை (21) இடம்பெற்றது.

(படங்கள் - ஏ.எஸ்.எம்.ஜாவித்)

# ஆசிரியரால் தாக்கப்பட்ட உயர்தர மாணவி கிளங்கன் வைத்தியசாலையில் சேர்ப்பு

(மஸ்கெலியா நிருபர்)

ஹட்டன் கல்வி வலயத்திலுள்ள பிரபல பாடசாலை ஆசிரியர் ஒருவர் தரம் 13இல் கல்வி பயிலும் மாணவியை பிரம்பால் அடித்தமையைத் தொடர்ந்து மாணவி காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான ஆசிரியர் ஹட்டன் பிரதேசத்தில் தனியார் வகுப்பு நடத்தும் ஆசிரியர் என்பதுடன், குறித்த மாணவி தனியார் வகுப்புக்கு வராத காரணத்தால் மாணவியை கொடி பிரம்பால் தாக்கியுள்ளதாகவும் மாணவியின் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

குறித்த ஆசிரியர் சுகயீனமென தெரிவித்து, டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். தாக்குதலுக்குள்ளான மாணவி க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் அனைத்து பாடங்களிலும் 'ஏ' தர சித்திபெற்றவர் என்பதுடன், குறித்த பாடசாலையில் உயிரியல் பிரிவில் கல்விகற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்பு ஆலோசகரின் பதவி முத்திரை, ஜனாதிபதி செயலக கடிதத் தலைப்பைப் பயன்படுத்தி போலி கடிதம்

## கைதான பொலிஸ் பரிசோதகருக்கு மே 4 வரை விளக்கமறியல்


பாதுகாப்பு ஆலோசகரும் ஜனாதிபதி செயலணியின் தலைவருமான சாகல ரத்நாயக்கவின் உத்தியோகபூர்வ முத்திரையை பயன்படுத்தியதுடன், ஜனாதிபதி செயலகத்தின் கடிதத் தலைப்பில் கையொப்பமிடப்பட்ட இரண்டு கடிதங்களை போலியாகத் தயாரித்து அவற்றை வடமத்திய சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் உட்பட இருவருக்கு அனுப்பி வைத்த குற்றச்சாட்டில் பொலிஸ் பரிசோதகர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது மே 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு அநுராதபுரம் மேலதிக நீதிவான் ருத்ரிகா டி சில்வா உத்தரவிட்டார்.

சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அறிக்கையை அன்றைய தினம் நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நீதிவான் மேலும் உத்தரவிட்டார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர் பொலன்னறுவை பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் 55 வயதான பொலிஸ் பரிசோதகர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இறக்குமதிசெய்யப்பட்ட முட்டைகளை மேல் மாகாணத்துக்கு மாத்திரம் விநியோகிக்க அனுமதி



இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை மேல் மாகாணத்துக்கு மாத்திரமே விநியோகிக்க கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளதாக அரச வணிக பல்நோக்குக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

ஏனைய மாகாணங்களிலுள்ள பாரியளவான வெதுப்பகம் மற்றும் உணவகங்களில் இறக்குமதி செய்யப்படும் முட்டைகளுக்குப் பாரிய கேள்வி உள்ளதாக அதன் தலைவர் ஆசிர வலிசுந்தர தெரிவித்தார்.

தேவைக்கு ஏற்ற வகையில் விநியோகத்தை வழங்கமுடியும் என்றாலும் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் அனுமதி கிடைக்காமை பிரச்சினையாக உள்ளதாக தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, கடந்த 15ஆம் திகதி நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட 10 இலட்சம் முட்டைகள், மேல் மாகாணத்திலுள்ள பாரியளவான வெதுப்பக மற்றும் உணவக உரிமையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், கடந்த 19ஆம் திகதி இறக்குமதி செய்யப்பட்ட 10 இலட்சம் முட்டைகள் பரிசோதனைக்கு அனுப்பப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.





உடப்பில் இன்னும் சில நாட்களில் தென்மேல் பருவக்காற்று ஆரம்பமாகவுள்ள நிலையில், குறிப்பிட்ட சில கரைவலைகள் மாத்திரம் தொழிலில் ஈடுபடுகின்றன. அதில் நேற்று (24) ஓரிரு வலையில் குறைவாக பிடிக்கப்பட்ட மீன்கள் வாடியில் தரம் பிரிக்கப்படுவதைக் காணலாம். (உடப்பு செய்தியாளர்)

# பண்டிகைக் காலத்தில் அதிக விலைக்கு உணவுப் பொருட்கள் விற்பனை

## 8,231 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

பண்டிகைக் காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேல் உணவுப் பொருட்கள் மற்றும் இனிப்பு வகைகளை விற்பனைசெய்த 8 ஆயிரத்து 231 வர்த்தகர்களுக்கு எதிராக நுகர்வோர் விவகார அதிகாரசபை சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகாரசபையின் விசாரணை அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்ட சில வர்த்தகர்கள் காலாவதியான கேக், பிஸ்கட் மற்றும் பிற பொருட்களை விற்பனை செய்துள்ளனர்.

முட்டை வியாபாரிகள் உட்பட ஏனைய விற்பனையாளர்களை கைதுசெய்ய நாடு முழுவதும் 5 ஆயிரத்து 200 விசேட புலனாய்வு அதிகாரிகள் நுகர்வோர் விவகார அதிகாரசபையால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நிர்ணய விலையை விட அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்ததாக நாடு முழுவதும் 809 முட்டை விற்பனையாளர்கள் மற்றும் முட்டை உற்பத்தியாளர்கள் கைதுசெய்யப்பட்டு, அவர்களில் 708 விற்பனையாளர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

குருநாகல் மாவட்டத்தில் மாத்திரம் 468 முட்டை விற்பனையாளர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக குருநாகல் மாவட்ட நுகர்வோர் விவகார அதிகாரசபை தலைமை விசாரணை அதிகாரி எச்.எம். குணரத்ன தெரிவித்துள்ளார்..

# மிரிஹான கொலைச் சம்பவத்தில் தப்பிச்சென்ற சந்தேகநபர் கைது

மிரிஹான பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்வல வீதிப் பகுதியில் வைத்து நபரொருவரை கத்தியால் குத்திக் கொன்று தப்பிச்சென்ற சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் (23) மிரிஹான குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளினால் மத்தேகொட வீதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் கல்வல வீதி, மிரிஹான பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய ஆராச்சிகே வாசன விபுல பெரேரா ஆவார்.

மிரிஹான கல்வல பகுதியில் நேற்று முன்தினம் (23) அதிகாலை நபர் ஒருவர் கத்தியால் குத்திப் படுகொலைசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இரு உலக சாதனைகளை படைத்த 4வயது சிறுமி



(பாண்டிருப்பு செய்தியாளர்)

அம்பாறை மாவட்ட கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட துறைவந்திய மேடு கிராமத்தைச் சேர்ந்த ஜனாசுகிர்தன் கிரண்யாஸ்ரீ (வயது04) இரண்டு உலக சாதனைகளைப் படைத்துள்ளார்.

இவர் தனது இரண்டு கைகளாலும் A தொடக்கம் Z வரை குறுகிய நேரத்தில் ஆங்கில எழுத்துகளை எழுதி அவர் ஏற்கனவே படைத்த சாதனையை முறியடித்துள்ளார்.

முதலாவது சாதனை A-Zவரை 3.30 நிமிடங்கள், இரண்டாவது சாதனை A-Z வரை 2.38 நிமிடங்கள். இவை இந்தியாவை தலைமையகமாகக் கொண்டியங்கும் இரண்டு உலக சாதனை நிறுவனங்கள் மூலம் நிகழ்த்தப்பட்டன. இந்தியாவில் சென்னையில் இருக்கும் Jackhi book of world record மற்றும் இந்தியா கல்கத்தாவில் இருக்கும் Netaji world record ஆகிய உலக சாதனை புத்தக நிறுவனங்களின் ஊடாக இச் சாதனை பதியப்பட்டுள்ளது.

சாதனை நிகழ்த்திய சிறுமியின் தந்தை ஜனாசுகிர்தன் உலகில் மிகச்சிறிய சிவலிங்கத்தை மரத்தில் செதுக்கி உலக சாதனை படைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருதில் இடம்பெற்ற தமிழ் - சிங்களப் புத்தாண்டு மற்றும் ரமழான் விளையாட்டு நிகழ்வுகள்







(மாளிகைக்காடு, பொலிவேரியன் செய்தியாளர்கள்)

சாய்ந்தமருதின் வரலாற்றில் முதல் தடவையாக தமிழ் - சிங்களப் புத்தாண்டு மற்றும் ரமழான் விளையாட்டு நிகழ்வுகள் சாய்ந்தமருது பொலிஸ் நிலையம் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புக் குழு ஆகியவற்றின் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை(23) பௌசி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

பாரம்பரிய புதுவருட விளையாட்டுகள் மற்றும் நடன நிகழ்வுகள் என களைகட்டியிருந்த இந்நிகழ்வு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல்.சம்சுடீன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டி.ஜயந்த ரத்னாயக்க கலந்துகொண்டு வெற்றியாளர்களுக்கு பரிசில்களை வழங்கினார். இதன்போது, இலங்கையில் தமிழ் - சிங்களப் புத்தாண்டு மற்றும் ரமழான் விளையாட்டு நிகழ்வுகள் ஒரே காலப்பகுதியில் ஒரே குடையின்கீழ் இடம்பெறுவது இனங்களுக்கிடையே அந்நியோன்யத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

கௌரவ அதிதியாக கல்முனை பொலிஸ் பிரதேச உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம்.எல்.வுட்டிக்க மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் ஆகியோர் கலந்து கொண்டதுடன் விசேட அதிதியாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் பொறியியலாளர் ஏ.எல்.எம்.பாறூக் கலந்து சிறப்பித்தார்.

மேலும் பிரதேச முக்கியஸ்தர்கள், விளையாட்டு வீரர்கள், சிறுவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.





**துறைநீலாவணையில் சித்திரை புதுவருட விளையாட்டு நிகழ்வுகள் கட்டுப்பாட்டுக்குழுத் தலைவரும் தொழில்நுட்ப உத்தியோகத்தருமான இலெட்சுமணன் சுதர்சன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை(23) துறைநீலாவணை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. தமிழர் கலை பண்பாட்டு விழுமியங்களை போற்றும் வகையிலான மரதன் ஓட்டம், தோணி ஓட்டம், கிடுகு இழைத்தல், தலையணைச்சமர், கயிறு இழுத்தல் உள்ளிட்ட கலாசார விளையாட்டுகள் நடைபெற்றதுடன் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன.**

**(துறைநீலாவணை செய்தியாளர்)**

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# 'பாடசாலை எங்களுடையது' நடைபவனி நற்பிட்டிமுனையில்





(பெரியநீலாவணை செய்தியாளர்)

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட சுமார் 75 வருட கால வரலாற்றைக்கொண்ட நற்பிட்டிமுனை அல்-அக்ஸா மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த சமூகத்துக்கும் பாடசாலைக்கும் இடையில் பிணைப்பை ஏற்படுத்தும் 'பாடசாலை எங்களுடையது' எனும் மாபெரும் நடைபவனி ஞாயிற்றுக்கிழமை(23) இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் எம்.எல்.பதியுத்தீன் தலைமையில் பாடசாலையின் பிரதான முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட நடைபவனி பிரதான வீதி வழியாக பிரதேசத்தின் எல்லைப் பகுதிக்குச்சென்று மீண்டும் உள்ளூர் வீதிகளின் ஊடாக பயணித்து அஷ்ரப் பொது விளையாட்டு மைதானத்தை சென்றடைந்தது.

வரலாற்று சிறப்புமிக்க இந்த நடைபவனிக்கு பிரதம அதிதியாக கொழும்பு சிறுவர் சீமாட்டி வைத்தியசாலையின் கதிரியக்க வைத்திய நிபுணரும் பாடசாலை பழைய மாணவருமான வைத்தியர் வை. உபைத்துல்லாஹ், கௌரவ அதிதியாக ஓய்வுபெற்ற ஆசிரியரும் அல்- ஹாமியா அரபுக் கல்லூரியின் முன்னாள் அதிபருமான அல்ஹாஜ் மௌலவி யூ.எல்.ஏ.கபூர் (பலாஹி) ஆகியோர் கலந்து கொண்டார்.

நடைபவனியின்போது, பாடசாலை பழைய மாணவரும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் நேத்ரா அலைவரிசை தமிழ் செய்திப் பிரிவு பணிப்பாளர் ஏ.பி.எம்.சியாம் உட்பட பாடசாலை பழைய மாணவர்கள், ஊர்ப் பிரமுகர்கள், உலமாக்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# பழுகாமத்தில் இடம்பெற்ற சித்திரைப் புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகள்







(வெல்லாவெளி செய்தியாளர்)

மட்டக்களப்பு போரதீவுப்பற்று பிரதேச செயலகம் மற்றும் பழுகாமம் சமுர்த்தி வங்கியினால் ஒழுங்கு செய்யப்பட்ட புத்தாண்டு விளையாட்டு போட்டிகள் திருப்பழுகாமம் வன்னி நகர் பசுந்தளிர் பாலர் பாடசாலை வளாகத்தில் சனிக்கிழமை(22)மாலை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்திப் பிரிவு கணக்காய்வாளர் திருமதி ஜெயவாணி கனகலிங்கம், பழுகாமம் சமுர்த்தி வங்கி முகாமையாளர் திருமதி ரஜேந்தினி சசிகரன், போரதீவுப்பற்று பிரதேச செயலக கணக்காளர் தில்லைநாதன் அம்பிகாவதி, சமுர்த்தி தலைமையக முகாமையாளர் ஆர்.தனேந்திரராசா, சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் அ.குககுமார், போரதீவுப்பற்று பிரதேச கலாசார உத்தியோகத்தர் ஆர்.பிரபாகரன், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், விளையாட்டு வீரர்கள், இளைஞர் யுவதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது சாக்கோட்டம், முட்டி உடைத்தல், கிடுகுபின்னல், மரதன் ஓட்டம், தேங்காய் திருவுதல் அன்னைக்கு பொட்டுவைத்தல் போன்ற கலாசார விளையாட்டுப்போட்டிகள் இடம்பெற்றன.

# நோன்புப் பெருநாளில் வீடு கையளிப்பு



(எருவில், மாளிகைக்காடு செய்தியாளர்கள்)

அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனமான நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் அமைப்பு 'வாழ்வில் வசந்தம்' வேலைத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பகுதியளவான 9ஆவது வீடு கையளிக்கும் நிகழ்வு சனிக்கிழமை(22) இடம்பெற்றது.

அமைப்பின் தலைவர் ஐ.எம்.நிஸ்மி தலைமையில் நிந்தவூர் 23ஆம் பிரிவு அட்டப்பள்ளம் பிரதேசத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் இணைப்பாளர் சங்கைக்குரிய மௌலவி அல்ஹாபிழ் ஏ.எச்.மின்ஹாஜ் (முப்தி) கலந்துகொண்டு பயனாளியிடம் குறித்த வீட்டை கையளித்தனர்.

நிந்தவூரைச் சேர்ந்த புகழ்பெற்ற கல்விமான் மர்ஹூம் சீ.ஓ.லெஸ்தகீர் குடும்ப நம்பிக்கை நிதியத்தின் பங்களிப்புடன் கையளிக்கும் நிகழ்வில் அமைப்பின் செயலாளர் ஏ.புஹாது, ஏசியன் நியூஸ் ஊடக வலயமைப்பின் பிரதானி சாஜித் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# நளீர் பவுண்டேஷன் சமூக சேவை அமைப்பினால் வீடுகள் கையளிப்பு





(மத்திய முகாம், மாளிகைக்காடு செய்தியாளர்கள்)

மத்திய முகாம் நளீர் பவுண்டேஷன் சமூக சேவை அமைப்பின் 10வருட நிறைவை முன்னிட்டு வீடுகள் கையளிக்கும் நிகழ்வு மத்திய முகாம் சாளம்பைக்கேணியில் வெள்ளிக்கிழமை(21) இடம்பெற்றது.

நளீர் பவுண்டேஷன் சமூக சேவை அமைப்பானது பல வருடங்களாக மக்களுக்கு சேவையாற்றி வருவதோடு அதன் ஸ்தாபகத் தலைவர் எம்.ஏ.நளீரின் முயற்சியினால் பல நற்பணிகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. அந்தவகையில், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு சுமார் 6 இலட்சம் பெறுமதியான 10 வீடுகளை கையளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில், சாளம்பைக்கேணியில் முதற்கட்டமாக கட்டப்பட்ட முதலாவது வீடு அம்பாறை மாவட்ட செயலக அரசாங்க அதிபர் ஜெ.எம்.ஏ.டக்ளஸினால் வழங்கி வைக்கப்பட்டதுடன் இரண்டாவது வீட்டுக்கான அடிக்கல்லும் நாட்டப்பட்டது.

இதற்கான நிதியினை அவுஸ்திரேலியாவில் உள்ள சிட்னி பிரதர்ஸ் அமைப்பு வழங்கி வைத்தது. இந்நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன், கணக்காளர் கே.ரிஸ்வி யஹ்சர், நளீர் பவுண்டேஷன் அமைப்பின் ஸ்தாபகத் தலைவரும் அடிப்படை மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண பணிப்பாளருமான எம்.ஏ.நளீர், அமைப்பின் தலைவர் எம்.ஏ.றஹீம், உபதலைவர் கே.எம். நௌபர், பொருளாளர் எம்.சி. பயாஸ், செயலாளர் கே.எல். ரிஸான் மற்றும் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



**சிவானந்தா கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வறுமைக் கோட்டுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் நலன்கருதி மாதந்தோறும் நடைபெற்றுவரும் மகிழ்ச்சிகர மாணவர் பயணத் திட்டத்தின் ஒன்பதாவது பாடசாலை செயற்பாடு மண்முனை மேற்கு கல்வி வலய மாவடிமுன்மாரி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் பி.சூரியகுமார் தலைமையில் சனிக்கிழமை(22) நடைபெற்றது. தெரிவுசெய்யப்பட்ட சுமார் 34 மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கப்பட்டதோடு மனவெழுச்சி மற்றும் மாணவர் ஊக்குவிப்புக் கருத்துரைகள் வளவாளர்களால் சிறந்த முறையில் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு வழங்கப்பட்டன. (துறைநீலாவணை செய்தியாளர்)**



**ஏ.ஆர்.மன்சூர் பவுண்டேசன் அனுசரணையில், கல்முனை பிராந்தியத்தில் இயங்கி வரும் ஜனாஸா நலன்புரி அமைப்புக்கு தேவையான உபகரணத் தொகுதி அன்பளிப்பு செய்யும் நிகழ்வு, ஜனாஸா நலன்புரி அமைப்பின் கல்முனை காரியாலயத்தில் இடம்பெற்றது. அமைப்பின் தலைவியும் சட்டத்தரணியுமான மர்யம் நளிமுதீன்(அவுஸ்திரேலிய முஸ்லிம் பெண்கள் கவுன்சிலின் தலைவி) வேண்டுகோளுக்கமைய வழங்கப்பட்ட உபகரணத் தொகுதியினை ஜனாஸா நலன்புரி அமைப்பினரிடம் ஏ.ஆர்.மன்சூர் பவுண்டேசன் தலைமை நிர்வாகிகள் கையளித்தனர். (எஸ்.அஷ்ரப்கான்)**









**ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரிட்டிஷ் கவுன்ஸில் நிதிப்பங்களிப்புடன் முஸ்லிம் எய்ட் நடைமுறைப்படுத்தும் SEDR Active Citizens எனும் செயற்றிட்டத்தின் கீழ் சம்மாந்துறையில் செயற்படுத்தப்படும் 'ஒரு மாற்றத்தை நோக்கி' குழுவின் ஏற்பாட்டில் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் இன நல்லுறவை கட்டியெழுப்பும் நோக்கில் சம்மாந்துறை கோரக்கர் வித்தியாலய மைதானத்தில் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. இதன்போது பிரதம விருந்தினர்களாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மத் ஹனீபா, சம்மாந்துறை கோரக்கர் தமிழ் மகா வித்தியாலய அதிபர் இளங்கோவன், பள்ளிவாசல் நிர்வாக சபையினர், விளையாட்டு உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (பாறுக் ஷிஹான்)**

# திருகோணமலை மக்களின் காணிப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்படும்

## தௌபீக் எம்.பி. தெரிவிப்பு



(அப்துல்சலாம் யாசீம், கந்தளாய் செய்தியாளர்)

குடாக்கரை மக்கள் எதிர்நோக்கும் காணிப்பிரச்சினை தொடர்பான மக்களுடனான கலந்துரையாடல் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் எம்.பி.யின் பங்கேற்புடன் சீனக்குடா திமுத்துகம விகாரையில் ஞாயிற்றுக்கிழமை (23) இடம்பெற்றது.

இதன்போது சின்னம்பிள்ளைசேனை, கருமலையூற்று, வெள்ளைமணல், நாச்சிக்குடா, சீனன்குடா, கவாட்டிக்குடா, கப்பல்துறை, முத்துநகர், பாலையூத்து, மட்கோ போன்ற பிரதேசங்களில் காணப்படுகின்ற காணிகளை இலங்கை துறைமுக அதிகாரசபை உரிமைகோரும் விடயம் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் தௌபீக் கருத்து தெரிவிக்கையில், குடாக்கரை காணிப்பிரச்சினை மாத்திரமன்றி திருகோணமலை மாவட்டத்தில் காணப்படும் அனைத்து காணிப்பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு தான் தொடர்ந்து முயற்சித்துக்கொண்டிருப்பதாகவும், திருமலை மாவட்ட காணிப்பிரச்சினைகள் அனைத்தும் விரைவில் தீர்க்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் சீனக்குடா விகாராதிபதி சங்கைக்குரிய அலுத்ஓயா சத்தாதிஸ்ஸ, திமுத்துகம விகாராதிபதி சங்கைக்குரிய சேருவில ஜயதிஸ்ஸ, முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் பஸீர் மற்றும் குடியிருப்பாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# மருதமுனையில் ஊடகப் பேரவை உதயம்



(பாறுக் ஷிஹான்)

மருதமுனை ஊடகப் பேரவையின் தொடங் குகை நிகழ்வும் இப்தாரும் மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியின் பெண்கள் பிரிவில் பேரவையின் ஸ்தாபகர் கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ.காதர் தலைமையில் வியாழக்கிழமை (20) இடம்பெற்றது.

சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எல்.எம்.ஜமால்டீன் தலைவராகவும், ஜெஸ்மி எம்.மூஸா பொதுச் செயலாளராகவும், ஏ.எல்.எம். ஷினாஸ் பொருளாளராகவும், தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், பிரதித் தலைவர், உப தலைவர்கள், தவிசாளர், பிரதி செயலாளர், அமைப்பாளர், ஊடக இணைப்பாளர், கணக்காய்வாளர் அடங்கலாக நிர்வாகக் குழு உறுப்பினர்களாக பதின்மரும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோருக்கான ஆவணங்களும் நிகழ்வில் கையளிக்கப்பட்டதுடன், மருதமுனை ஊடகப் பேரவையின் பின்வரும் நிர்வாகிகள் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்கள்.

தலைவர்- எம்.எல்.எம்.ஜமால்டீன் (சிரேஷ்ட ஊடகவியலாளர்), பொதுச் செயலாளர்-ஜெஸ்மி எம்.மூஸா (சிரேஷ்ட ஊடகவியலாளர்), பொருளாளர்-ஏ.எல்.எம்.ஷினாஸ் (சிரேஷ்ட ஊடகவியலாளர்), பிரதித் தலைவர், ஸ்தாபகர், கலாபூஷணம் பீ.எம்.எம்.ஏ.காதர் (சிரேஷ்ட ஊடகவியலாளர்), தவிசாளர் - ஊடக வித்தகர் இஸ்மாயில் பி.மஃஆரிப், உப தலைவர்கள்: பஸீர் அப்துல் கையூம் (பிரதிப் பணிப்பாளர் - SLBC, பணிப்பாளர் - பிறை எவ்.எம்), ஏ.எம்.முகம்மட் அன்சார் (சிரேஷ்ட அறிவிப்பாளர் - பிறை எவ்.எம்), பிரதி செயலாளர் - ஊடகவியலாளர் ஏ.ஆர்.ஏ.நபாயிஸ், அமைப்பாளர்: ஏ.எச்.எம்.பூமுடீன்(சிரேஷ்ட ஊடகவியலாளர்), கணக்கு பரிசோதகர்: ஏ.டபிள்யூ.எம்.ஜெஸீம்(அறிவிப்பாளர், செய்தி வாசிப்பாளர் - வசந்தம்), ஊடக இணைப்பாளர்: இஸ்மாயில் எம்.இல்யாஸ் (நிகழ்ச்சித் தயாரிப்பாளர், செய்தி வாசிப்பாளர், அறிவிப்பாளர்), நிர்வாகக் குழு உறுப்பினர்கள்: எம்.ஏ.நஸீர் (அறிவிப்பாளர் - பிறை எவ்.எம்.), ஏ.ஜே.சமீம் (சிரேஷ்ட ஊடகவியலாளர்), எம்.ஐ.எம்.வலீத், நழீம் எம்.பதுறுதீன், ஏ.டபிள்யூ.ஜெஸீல், ஏ.ஆர்.ஏ.புஹாரி, எம்.சி.மறூஸ், ஏ.எல்.வஸீம் அகமட், நஜிமுடீன் எம்.ஹஸ்ஸான்,

போசகர் சபை: எம்.ஐ.ஏ.பரீட்(முகாமைத்துவப் பணிப்பாளர் - பறக்கத் பிறைவேட் லிமிட்டட்), எம்.எச்.எம்.தாஜுதீன் (முகாமைத்துவப் பணிப்பாளர் - சறோ பாம் பிறைவேட் லிமிட்டட்), எம்.ஐ.உபைதுர் ரஹ்மான் (முகாமைத்துவப் பணிப்பாளர் - ஜாஹி வீவிங்), ஏ.சி.நளீர் - முகாமைத்துவப் பணிப்பாளர் - தஹானி ஹாட்வெயார்), எம்.ஐ.எம்.முகர்றப் (தலைவர், மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆப் பள்ளிவாசல்),

சட்ட ஆலோசனை சபை: சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.பதுறுதீன், சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.ஜமீல், சிரேஷ்ட சட்டத்தரணி - காதி நீதிவான் - எவ்.எம்.அன்சார் மௌலானா, சிரேஷ்ட சட்டத்தரணி றைசுல் ஹாதி,

சமய ஆலோசனை சபை: எம்.எல்.எல்.முபாறக் மதனி, எம்.எவ்.அகமது அன்சார், மௌலானா நழீமி மற்றும் றஸ்மி மூஸா(ஸலபி) ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

இப்பேரவையானது மருதமுனை, பெரியநீலாவணை, அக்பர் கிராமம் மற்றும் பாண்டிருப்பு முஸ்லிம் பிரிவுகளை உள்ளடக்கிய அச்சு, இலத்திரனியல் ஊடகவியலாளர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாவட்ட மக்கள் தொகை மற்றும் வீட்டு வசதிகள் கணக்கெடுப்பு



(கல்லடி செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மக்கள் தொகை மற்றும் வீட்டு வசதிகள் கணக்கெடுப்பு 2024இற்கான கிராமசேவகர் பிரிவு ரீதியான வரைபடங்களை கையளிக்கும் நிகழ்வு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களிலுள்ள கிராமசேவகர் பிரிவுகளின் பெரிய அளவிலான அச்சிடப்பட்ட வரைபடங்கள் அப்பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்கள வெளிக்கள உத்தியோகத்தர்களூடாக பிரதேச செயலாளர்களிடம் கையளிப்பதற்கான நிகழ்வு தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கிராம சேவகர் பிரிவு ரீதியாக வரைந்த படங்களை துணையாகக்கொண்டு 2024இல் மேற்கொள்ளப்படவுள்ள மக்கள் தொகை மற்றும் வீட்டு வசதிகள் தொடர்பான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின்போது மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திருமதி நவரூபரஞ்ஜினி முகுந்தன் மற்றும் மாவட்ட புள்ளிவிபரவியலாளர் ரி.ஜெய்தனன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# காட்டு யானை தொல்லையினால் வீடு உள்ளிட்டவைகளுக்கு பாரிய சேதம்

## பாதுகாத்துத் தருமாறு கிராம மக்கள் கோரிக்கை

(கந்தளாய் செய்தியாளர்)

திருகோணமலை, கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பன்னிரெண்டாம் கட்டை பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (23) அதிகாலை கிராமத்துக்குள் புகுந்த காட்டு யானைகள் வீடுகளை உடைத்தும் நெல் மூடைகளை சேதப்படுத்தியும் உள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் நாளாந்தம் பிரதேசத்துக்குள் நுழையும் காட்டு யானைகள் தமது வீடுகளை உடைத்து அங்கு வைக்கப்பட்டுள்ள நெல் மூடைகளை இழுத்துச்சென்று சாப்பிடுவதாகவும் இதனால் இரவுவேளைகளில் வெளியில் நடமாட முடியாத அச்சநிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கும் இவர்கள், இதனால் பல்வேறு சிரமங்களை நாள்தோறும் எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.



மேலும், அப்பகுதியில் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளபோதிலும் அதனை உடைத்தெறிந்தே பிரதேசத்துக்குள் காட்டு யானைகள் உள்நுழைகின்றன. இதனால் எமது வீடும் பாரியளவில் சேதமடைந்துள்ளது. இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி மீளமைத்துத் தருமாறு பாதிக்கப்பட்ட வீட்டு உரிமையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மட்டு. நகர வீதியில் ஆண் ஒருவர் சடலமாக மீட்பு

## அடையாளம் காண பொதுமக்களிடம் கோரிக்கை

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகர் முனைவீதி 2ஆம் குறுக்கு வீதியில் உயிரிழந்த நிலையில் அடையாளம் காணப்படாத நிலையில் ஆண் ஒருவர் திங்கட்கிழமை (24) சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீதியில் சம்பவதினத்தன்று காலை சடலம் ஒன்று இருப்பதைக் கண்டு பொதுமக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருவதுடன், குறித்த நபர் நகர் பகுதியில் பிச்சை எடுத்து வந்துள்ளதாகவும் அடையாளம் காணப்படவில்லை எனவும் நீதிமன்ற அனுமதியைப் பெற்று சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக மட்டு. போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். எனவே, இவர் தொடர்பாக அடையாளம் தெரிந்தவர்கள் அறிவிக்குமாறு பொதுமக்களை பொலிஸார் கோரியுள்ளனர்.

இதேவேளை, கடந்த மாதம் 25ஆம் திகதி மட்டக்களப்பு காந்திபூங்காவின் முன்னால் உள்ள வாவியில் சடலமாக மீட்கப்பட்ட பெண் ஒருவர் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில், மட்டு. போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. எனவே, இவர் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு பொதுமக்கள் உதவியை கோரியுள்ளனர்.

# போடியார் புலம்பல்!



***இண்டைக்கு தமிழ்க் கட்சிகள் ஏழு சேர்ந்து வடக்கு, கிழக்கு முழுவதும் ஹர்த்தால் செய்யிறாங்க எலுவா? உண்மையில ஒன்றுபட்டு இத செய்தாலும் சைக்கிள் கார பொடியன்கள் மட்டும் எட்ட நின்று வேடிக்கை பார்கிறாங்க.. அவங்க மட்டும் ஆரு என்னத்த சொன்னாலும், ஆரு என்னத்த செய்தாலும் தாம் செய்யிற மட்டும்தான் சரி மற்ற கட்சிகள் என்ன செய்தாலும் அது பிழை எண்டுதானே 14, வருசமாக சொல்லுறாங்க. இண்டய ஹர்தாலுக்கும் என்னத்தயும் சொல்லாம உடமாட்டானுகள் இந்த "ஒரு நாடு இரு தேசம்" படம் காட்டுற பையனுகள்.!***

# அம்பாறை மாவட்ட மக்கள் ஹர்த்தாலுக்கு ஆதரவு தருக!

## முன்னாள் மாநகர சபை உறுப்பினர் ஹென்ரி மகேந்திரன் கோரிக்கை

(எருவில் செய்தியாளர்)

வடக்கு, கிழக்கில் இன்று 25ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தாலுக்கு அம்பாறை மாவட்ட தமிழ் - முஸ்லிம் மக்கள் முழு ஆதரவை வழங்க முன்வரவேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கல்முனைப் பிராந்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தரும், ரெலோ அமைப்பின் உப தலைவரும், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஹென்ரி மகேந்திரன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு கோரப்பட்டுள்ளதுடன், குறிப்பாக தமிழ் மக்களுடன் இணைந்து அம்பாறை மாவட்ட முஸ்லிம் மக்களும் வர்த்தகர்களும் இந்த ஹர்த்தால், கடையடைப்பு வெற்றிபெற ஆதரவு தர வேண்டுமெனவும் கோரியுள்ளார்.

மேலும், ஏழு தமிழ்த் தேசியக் கட்சிகளும், பொது அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்களும் இணைந்து மேற்படி பூரண ஹர்த்தால் மற்றும் முழுகடையடைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளன. அனைத்து இன மக்களையும் வதைக்கக்கூடிய படுமோசமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் நாளை (இன்று) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருப்பதை ஆட்சேபிக்கும் பிரதான விடயம் உட்பட பல்வேறு அரசின் தமிழ், முஸ்லிம் மக்கள் மீதான அடக்குமுறைகள், உரிமை மீறல்கள் தொடர்பில் கண்டித்தும் இந்த ஹர்த்தால் முன்னெடுக்கப்படவுள்ளது.

# வாகன விபத்தில் மூவர் படுகாயம்: ஒருவரின் நிலை கவலைக்கிடம்!

(மாவடிப்பள்ளி செய்தியாளர்)

கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதி, அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர்கள் மூவர் படுகாயமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கல்முனை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்துச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (23) இரவு 9.55 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது,

சொகுசு ரக கார் ஒன்றுடன் வீதியில் சென்று கொண்டிருந்த மோட்டார்சைக்கிளொன்று நேருக்கு நேர் மோதியதிலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. இதனால் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் மூவரும் பலத்த காயங்களுடன் அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், இதில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, விபத்துக்குள்ளான காருக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக கல்முனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சாய்ந்தமருது பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பினால் உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு



(மாளிகைக்காடு செய்தியாளர்)

சாய்ந்தமருது பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் ஏற்பாட்டில் அபிவிருத்தி உத்தியோகத்தர் றிகாஸா ஷர்பீனின் நெறிப்படுத்தலில் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தலைமையில் இப்தாரும், பெண் சமுர்த்தி முகாமையாளர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கௌரவிப்பும் மாளிகைக்காடு தனியார் மண்டபத்தில் இடம்பெற்றன.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன் கலந்துகொண்டார். மேலும் இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்ராஸ், சாய்ந்தமருது பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிகா, தலைமைப் பீட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ.ஏ.நஜீம், சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் செயலாளர் ஐ.எல்.எம்.மன்சூர், சமுர்த்தி முகாமையாளர் எஸ்.றிபாயா, சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் றியாத் ஏ.மஜீத், நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சீ.எம். பழில், நிதி உதவியாளர் ஏ.சி.முஹம்மட், கல்முனை பிரதேச செயலக தலைமைப் பீட சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ், சமுர்த்தி முகாமையாளர்களான எம்.எம்.முபீன், எம்.எஸ்.எம்.மனாஸ், அந்நூர் சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் ஏ.அலாவுதீன் உள்ளிட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர், செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட அங்கத்தவர்கள், கிராம மட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

நிகழ்வில் மார்க்க சொற்பொழிவை மௌலவி ஏ.அஷ்ரஃப் நிகழ்த்தினார். இதன்போது கடந்த சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெண் சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சாய்ந்தமருது - 17 அந்நூர் சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் ஏ.அலாவுதீனின் அனுசரணையில் சமுர்த்தி கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

சமுர்த்தி கௌரவிப்பில் சமுர்த்தி முகாமையாளராக பதவியுயர்வு பெற்ற றியாத் ஏ.மஜீத், சாய்ந்தமருது பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பினை சிறந்த முறையில் வழிகாட்டி மக்கள் பணியாற்றிவரும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப்.றிகாஸா ஷர்பீன், அர்ப்பணிப்புடன் மக்கள் பணியாற்றிய சமுர்த்தி முகாமையாளர் எஸ்.றிபாயா, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எம்.ஆர்.எஸ்.ஷாமிலா, எம்.எஸ்.நூருல் றிபா, எல்.ஜி.எம்.மும்தாஜ் மர்யம், ஜே.எம்.றம்ஸா உள்ளிட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் பிரதிநிதிகள் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# அடுத்தடுத்த நிலநடுக்கங்களால் அதிர்ந்த நியூசிலாந்து - இந்தோனேசியா

நியூசிலாந்தின் கெர்மடெக் தீவுகள் அருகே நேற்று 7.2 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் அங்கு சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

### இந்தோனேசிய தீவில் 2 நிலநடுக்கங்கள் பதிவு

இதேவேளை, இந்தோனேசியாவின் கெபுலாவான் பாடு தீவு பகுதியில் நேற்று அதிகாலை அடுத்தடுத்து இரண்டு நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. முதல் நிலநடுக்கம், ரிச்டர் அளவில் 6.1 ஆகவும், அதைத் தொடர்ந்து சில மணிநேரங்களுக்குப் பின்னர் 5.8 ரிச்டர் அளவிலான இரண்டாவது நிலநடுக்கம் ஏற்பட்டதாக ஐரோப்பிய மத்திய தரைக்கடல் நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

நியூசிலாந்தின் நேற்று காலை 6.11 மணியளவில் 7.2 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. இதனை அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் உறுதி செய்துள்ளது. பூமிக்கு அடியில் 10 கி.மீ. ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக

## சுனாமி எச்சரிக்கை; பீதியில் மக்கள்

புவியியல் ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. நிலநடுக்கத்தால் வீடு, கட்டடங்கள் பயங்கரமாக குலுங்கின. இதனால் வீடுகளில் தூங்கிக்கொண்டிருந்த மக்கள் பீதியடைந்து வீடுகளை விட்டு வெளியேறி வீதிகள் மற்றும் சாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

அதே இடத்தில் சில மணி நேரங்களுக்கு பின்னர் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கத்தால் உயிர் இழப்போ, பொருட்சேதமோ எதுவும் ஏற்படவில்லை. இருந்த போதிலும் நிலநடுக்கத்தை தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.




உலக செய்திகள்

# கடவுளைக் காண நடுக்காட்டில் உண்ணாவிரதம்

## கென்யாவில் 47 பேரின் சடலங்கள் மீட்பு; கொள்கை பிரசாரம் செய்த போதகர் கைது



கென்யாவில், கடவுளைக் காண்பதற்காக நடுக்காட்டில் சுயவிருப்பத்தின் பேரில் பட்டினி கிடந்து உயிரிழந்த மேலும் 26 பேரின் உடல்களை கென்ய பொலிஸார் மீட்டுள்ளனர்.

பட்டினியால் இறப்பதன் மூலம் சொர்க்கத்தை அடையலாம் என்ற கொள்கைளை பிரசாரம் செய்து 'Good News International Church' என்ற பெயரில் அமைப்பு நடத்திவந்த மகென்சி என்தெங்கே என்ற போதகரை கைதுசெய்து நடத்திய விசாரணைகளின் பின்னரே இந்த சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. கடந்த 3 நாட்களில் கண்டுபிடிக்கப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை 47 ஆக உயர்ந்துள்ளது.

# இரட்டிப்பு வேகத்தில் உயரும் கடல்மட்டம்



உலகில் கடல்மட்டம் உயரும் வேகம் இரட்டிப்பாகியுள்ளதாக ஐ.நா காலநிலை அறிக்கையில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து ஐந்தாவது அல்லது ஆறாவது வெப்பமான ஆண்டாக கடந்த 2022 ஆம் ஆண்டு அமைந்ததால், சராசரியை விட சராசரியாக 1.15 டிக்ரி செல்சியஸ் வெப்பம் அதிகமாக இருந்ததாகவும், இது கடந்த 8 ஆண்டுகளில் உலகளவில் பதிவாகிய மிகவும் வெப்பமான ஆண்டு என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

உலகளாவிய கடல் வெப்பம் மற்றும் அமிலத்தன்மை உச்ச அளவை எட்டியுள்ளன என்றும், அண்டார்டிக் கடல் பனி மற்றும் ஐரோப்பிய ஆல்ப்ஸ் பனிப்பாறைகள் இதுவரை இல்லாதளவுக்குக் குறைந்துள்ளன எனவும் ஐ.நா. அறிக்கை கவலை தெரிவித்துள்ளது.

# பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி ஏற்படும்: முன்னாள் பிரதமர் அப்பாஸி எச்சரிக்கை



''நாட்டில் பொருளாதார, அரசியல் பிரச்சினைகள் மிக மோசமாக உள்ளது என்றும் இதற்கு தீர்வுகாணாவிட்டால் இராணுவ ஆட்சி ஏற்படும்'' என்று பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் அப்பாஸி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து முன்னாள் பிரதமர் ஷாஹித் ககான் அப்பாஸி தெரிவிக்கையில்,

''அரசு அமைப்புகளுடனான மோதலுக்கு தீர்வு காண அரசியல் தலைமை பேச்சு நடத்தாவிடில் இராணுவ சட்டம் அமுல்படுத்துவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. ஏற்கனவே இதுபோன்ற சூழ்நிலைகளில் இராணுவம் ஆட்சியை கைப்பற்றியுள்ளது. நாட்டின் வரலாற்றின் பாதி காலம் இராணுவ ஜெனரல்களின் ஆட்சி தான் நடந்துள்ளன. சமூகங்கள் மற்றும் அரசு அமைப்புகளுக்கு இடையேயான மோதல் அதிகமானதால் அதிகார பலம் கொண்ட இராணுவம் தலையிட நேரிடும். வேறு வழியில்லையென்றால் இது தான் நடக்கும்'' - என்றார்.

# பறவை மோதி விமானத்தில் தீ



அமெரிக்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான விமானம் கொலம்பஸ் நகரிலிருந்து அரிசோனா மாகாணத்திலுள்ள பீனிக்ஸ் நகரத்திற்கு புறப்பட்டு சென்றது. இந்த விமானம் புறப்பட்டு நடுவானில் சென்று கொண்டிருந்தபோது திடீரென விமானத்தில் பறவைகள் மோதின.

இதில் விமானத்தின் வலது பக்க என்ஜினில் தீ பிடித்தது. இதனால் பீதியடைந்த பயணிகள் கூச்சலிட தொடங்கினர்.

இதனையடுத்து விமான கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் வழங்கப்பட்டது. புறப்பட்ட விமான நிலையத்திலேயே தீப்பிடித்த விமானம் தரையிறக்கப்பட்டது. அங்கு தீயணைப்பு வீரர்கள் உடனடியாக தீயை அணைத்ததாகவும் கூறப்படும் நிலையில், சம்பவம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த விபத்தில் பயணிகள், விமானிகள், பணியாளர்கள் அனைவருமே காயமின்றி தப்பியுள்ளனர்.

# விற்பனைக்கு வரும் குட்டித் தீவு



பிரிட்டனின் ஓர் அங்கமாகத் திகழும் ஸ்கொட்லாந்தில் 25 ஏக்கர் பரப்பளவு தீவு, ஒன்றரை கோடி ரூபாவுக்கு (இந்திய ரூபாபடி) விற்பனை செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவின் விற்பனையை கையாளும் கால்பிரைத் குழுமம் வெளியிட்டுள்ள அறிவிப்பின் படி, தீவு தலைநகர் எடின்பர்க்கிலிருந்து 100 மைலிலும், லண்டனிலிருந்து 350 மைல் தொலைவில் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தீவில், பெரிய கருப்பு முதுகு கொண்ட காளைகள் இருப்பதோடு, ரொக் சீ லொவெண்டர் மற்றும் நறுமணமுள்ள ஆர்க்கிட் போன்ற அரிய தாவரங்களும் உள்ளதாக குழுமம் தகவல் வெளியிட்டுள்ளது.

# தடைகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் முறையீடு



உக்ரைனில் நடந்த போரின் காரணமாக விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை திரும்பப் பெற முயற்சித்துரஷ்யாவின் முன்னாள் ஃபார்முலா ஒன் ஓட்டுநர் நிகிதா மசெபின், கனேடிய ஃபெடரல் நீதிமன்றத்தில் விண்ணப்பித்துள்ளார்.

கடந்த ஆண்டு மே மாதம் கனேடிய அரசாங்கத்தால் தடைவிதிக்கப்பட்டவர்களில் நிகிதா மசெபி , அவரது தந்தை டிமிட்ரி மசெபின் ஆகியோர் அடங்குவர்.

பெலாரசிய-ரஷ்ய தன்னலக்குழு டிமிட்ரி மசெபின், யுரால்கெம் குழுமத்தின் நிறுவனர் ஆவார், இது உலகின் மிகப்பெரிய உற்பத்தியாளர்கள் மற்றும் நைட்ரஜன், பொட்டாஷ் மற்றும் சிக்கலான உரங்களின் ஏற்றுமதியாளர்களில் ஒன்றாகும்.

நிகிதா மசெபின் 2021 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஹாஸ் ஃபார்முலா ஒன் அணியில் சேர்ந்தார், ஆனால் உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பைத் தொடர்ந்து கடந்த ஆண்டு மார்ச் மாதம் அவரது ஒப்பந்தம் நிறுத்தப்பட்டது.

கனேடிய தடைகள் பட்டியலிலிருந்து அவரை நீக்குமாறு வெளியுறவு அமைச்சர் மெலனி ஜோலிக்கு உத்தரவிடுமாறு அவர் பெடரல் நீதிமன்றத்திடம் உத்தரவிட வேண்டும் அல்லது குறைந்தபட்சம் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட அவரது விண்ணப்பத்தின் முடிவை ஐந்து நாட்களுக்குள் உறுதிப்படுத்த வேண்டும் என்று அவர் கோருகிறார்.

கடந்த மாதம், ஐரோப்பிய யூனியன் (EU) ஜெனரல் கோர்ட் மசெபின்னை ஐரோப்பாவில் தனது மோட்டார் பந்தய வாழ்க்கையை மீண்டும் தொடங்க அனுமதித்தது, இருப்பினும் அவர் தனது தந்தை அல்லது EU ஆல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட எவருடனும் தொடர்புடைய ஒரு அணியில் போட்டியிட தடை விதிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் படையெடுப்பைத் தொடர்ந்து, சர்வதேச ஆட்டோமொபைல் கூட்டமைப்பு (FIA) ரஷ்ய மற்றும் பெலாரஷ்ய தனிநபர் ஓட்டுநர்கள் தங்கள் நாட்டின் நடவடிக்கைகளை திறம்பட கண்டிக்கும் ஆவணத்தில் கையெழுத்திட்டால் மட்டுமே நடுநிலை FIA கொடியின் கீழ் போட்டியிட முடியும் என்று தீர்ப்பளித்தது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com




# ராசி இல்லாத பச்சை நிற சீருடை



ஃபாப் டு பிளெசிஸ் தலைமையிலான ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணியை சின்னசாமி ஸ்டேடியத்தில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியை எதிர்கொண்ட போது பச்சி சீருடை அணிந்து விளையாடியது. ஆர்.சி.பி. தனது ட்விட்டர் பக்கத்தில், "எங்களில் இந்த சிறப்பான க்ரீன் நிற ஜெர்சி 100 சதவீதம் மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்களால் உருவாக்கப்பட்டவை. " என்று பதிவிட்டு இருந்தது.

இந்த ஆண்டு ஆர்சிபி அணிக்காக தயாரிக்கப்பட்ட பச்சை நிற சீருடை, மைதானத்தில் சேகரிக்கப்பட மறுசுழற்சி செய்யப்பட்ட கழிவுகளை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. ஆர்சிபி இந்தாண்டு தனது முதல் போட்டியில் மும்பை அணிக்கு எதிரான சின்னசாமி மைதானத்தில் விளையாடியது. அதில், 9047.6 கிலோ கழிவுகளும், 19,488 தண்ணீர் பாட்டில்கள் கண்டெடுக்கப்பட்டது. அதேபோல், ஒவ்வொரு போட்டிக்கு பிறகும் சராசரியாக எட்டு தொன் உலர் கழிவுகள், உணவுக் கழிவுகள் மற்றும் பிற மறுசுழற்சி செய்யக்கூடிய கழிவுகள் மைதானத்தில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு முதல் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி ஐபிஎல் இல விளையாடுகிறது. கடந்த 2011ம் ஆண்டு முதல் 'கோ க்ரீன்' என்ற சுற்றுச்சூழல் பிரச்சனைகளை கருத்தில் கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் பச்சை நிற சீருடையில் விளையாடி வருகிறது. கடந்த 2021 ம் ஆண்டை தவிர பெங்களூர் அணி அனைத்து ஆண்டுகளும் பச்சை நிற சீருடை அணிந்து விளையாடியுள்ளது. கடந்த 2021ம் ஆண்டு மட்டும் முன்களப் பணியாளர்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் நீல நிற சீருடை அணிந்து பெங்களூரு அணி விளையாடியது.

பெங்களூர் அணி பச்சை நிற சீருடை அணிந்து விளையாடிய போதெல்லாம் அந்த அணிக்கு பெரியளவில் ராசியாக அமைந்ததில்லை. இதுவரை 13 போட்டிகளில் பச்சை நிறசீருடையுடன் விளையாடி அதில் 4ல் மட்டுமே வெற்றிபெற்றுள்ளது. மீதமுள்ள 8 போட்டிகளில் எதிரணிகளே வெற்றிபெற்றுள்ளனர். ஒரு போட்டிக்கு முடிவு இல்லை.

# இந்திய மல்யுத்த வீரர், வீராங்கனைகள் மீண்டும் போராட்டம்



இந்திய மல்யுத்த கூட்டமைப்பு தலைவராக இருந்த பிரிஜ் பூஷன் சரண் சிங் மீதான பாலியல் புகாரில் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாததைக் கண்டித்து டெல்லியில் மல்யுத்த வீரர், வீராங்கனைகள் மீண்டும் போராட்டம் நடத்தினர்.

இந்திய மல்யுத்த சம்மேளன தலைவர் பிரிஜ் பூஷன் சரண் சிங், இளம் மல்யுத்த வீராங்கனைகளுக்கு பாலியல் தொந்தரவு கொடுப்பதாகவும், அவரது பதவியை பறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பஜ்ரங் பூனியா, சாக்ஷி மாலிக் உள்ளிட்ட மல்யுத்த நட்சத்திரங்கள் டெல்லியில் கடந்த ஜனவரி மாதம் போராட்டம் நடத்தினர். இதனையடுத்து அவரது பதவி பறிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து, குற்றச்சாட்டு குறித்து விசாரிக்க மேரி கோம் தலைமையில் 6 பேர் கொண்ட குழுவை மத்திய விளையாட்டு அமைச்சகம் அமைத்தது. பாலியல் புகார் தெரிவித்து 3 மாதங்களாகியும் நடவடிக்கை இல்லாத நிலையில் டெல்லியில் மல்யுத்த வீரர், வீராங்கனைகள் மீண்டும் போராட்டம் நடத்தினர். டெல்லி ஜந்தர்மந்தரில் நடைபெற்ற போராட்டத்தில் பஜ்ரங் புனியா, விக்னேஷ் போகத், சாக்ஷி மாலிக் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். 2 மாதங்களுக்கு பிறகும், தங்களுக்கு மிரட்டல்கள் வருவதாகவும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றம்சாட்டினர்.

# ஜேர்மனிய பத்திரிகை ஆசிரியர் பணி நீக்கம்



ஏழு முறை ஃபார்முலா ஒன் சாம்பியனான மைக்கேல் ஷூமேக்கரின் போலி மேற்கோள்களை உருவாக்க செயற்கை நுண்ணறிவு திட்டத்தைப் பயன்படுத்தியதற்காக ஜேர்மன் பத்திரிகையான Die Aktuelle இன் ஆசிரியர் பணிநீக்கம் செய்யப்பட்டதாக ஃபன்கே ஊடகக் குழு அறிவித்துள்ளது.

2013 ஆம் ஆண்டு பிரெஞ்சு ஆல்ப்ஸில் பனிச்சறுக்கு விபத்தில் ஷூமேக்கருக்கு கடுமையான மூளைக் காயம் ஏற்பட்டதில் இருந்து, ஆன் ஹாஃப்மேன் புதன்கிழமை இந்த நேர்காணலை வெளியிட்டபோது சர்ச்சை ஏற்பட்டது.

விபத்து நடந்ததில் இருந்து 54 வயதான ஷூமேக்கரின் தனியுரிமையை கவனமாக பாதுகாத்து வந்த ஷூமேக்கரின் குடும்பத்தினர், சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க திட்டமிட்டுள்ளதாக தெரிவித்தனர்.

Funke இதழ் குழுமத்தின் இயக்குனர் Bianca Pohlmann சனிக்கிழமை குடும்பத்தினரிடம் மன்னிப்பு கேட்டார்.

"2009 ஆம் ஆண்டு முதல் பொறுப்பில் இருக்கும் டை அக்டுவெல் இன் தலைமை ஆசிரியர் அன்னே ஹாஃப்மேன், தற்போது தனது பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்."

அந்தக் கட்டுரையில் ஷூமேக்கருக்குக் கூறப்பட்ட மேற்கோள்கள் அடங்கும், விபத்துக்குப் பிறகு அவரது குடும்ப வாழ்க்கை மற்றும் அவரது உடல்நிலை பற்றி விவாதிக்கப்பட்டது.

காயம் ஏற்பட்டதில் இருந்து ஷூமேக்கர் பொது வெளியில் காணப்படவில்லை மற்றும் அவரது உடல்நிலை குறித்து சிறிய தகவல்கள் வெளியிடப்பட்டன.

ஷூமேக்கருக்கு நினைவாற்றல், இயக்கம் மற்றும் பேச்சு பிரச்சனைகள் இருப்பதாகவும், ஜெனிவாவிற்கு அருகில் உள்ள வீட்டில் அவர் பராமரிக்கப்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மைக்கேலின் மகன், 24 வயதான மிக், ஃபார்முலா ஒன் டிரைவராகவும், தற்போது மெர்சிடிஸ் நிறுவனத்தில் ரிசர்வ் டிரைவராகவும் உள்ளார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7